பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -291

## ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ள கொரோனாவின் ஒரு வரலாற்று பதிவு



## கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களை குணப்படுத்துங்கள் இல்லையேல் கருணைக் கொலை செய்யுங்கள்



## அரசியல் இலாபத்திற்காகப் பெண்கள் பகடைக் காய்களாக்கப்படுகின்றார்கள்



# கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களை குணப்படுத்துங்கள் இல்லையேல் கருணைக்கொலை செய்யுங்கள்

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவி வருகின்றது. இதில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அடிப்படையில் பார்க்கையில் நாடு முழுவதும் கிட்டத்தட்ட 178 நாடுகளிலே இந்த கொரோனா வைரஸ் பரவியிருக்கிறது.

கொரோனா வைரஸினுடைய தாக்கமானது மூன்றாம் கட்ட உலகப்போர் அல்லது இந்த நாட்டிலே ஒரு சர்வதிகாரியாக இருக்கக்கூடிய அமெரிக்கா தன்னுடைய கெமிக்கல் ஆயுதத்தை இரகசியமான முறையில் பயன்படுத்தியிருக்கின்றது என்று தான் சீனாவில் இருக்கக்கூடிய விஞ்ஞானிகளும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே கொரோனா வைரஸ் என்பது பாரிய நெருக்கடியை உலகளாவிய ரீதியிலே ஏற்படுத்தியிருக்கின்றது.

198 நாடுகளை உள்ளடக்கிய உலகத்திலே கிட்டத்தட்ட 178 அல்லது 180 நாடுகளிலே இந்த வைரஸ் பரவியிருக்கின்றது என பார்க்கும் பொழுது இனி வரும் காலத்தில் ஆயுதத்தை கொண்டு இந்த நாட்டை தாக்கிப்பிடிக்கவோ அல்லது அழிக்கவோ தேவையில்லை என்னும் நிலைப்பாடு தற்பொழுது உருவாகியிருக்கின்றது. எந்த வகையிலும் நாங்கள் எங்களுடைய நாட்டை பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தால் என்ன செய்ய வேண்டும்?

கொரோனா வைரஸின் பின்புலத்தில் அமெரிக்கா சீனா போன்ற நாடுகள் இருக்கின்றது என்பதை ஒருபுறம் வைத்துக்கொண்டாலும் தற்பொழுது இலங்கைத்தீவை எப்படி தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை அனைத்து இலங்கையரும் தீர்மானிக்க வேண்டிய ஒருநிலைப்பாட்டிலே. கட்டாயத்திற்குள்ளே தள்ளப்பட்டிருக்கின்றோம்.

எங்களுடைய நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதனூடாக அந்நிய நாட்டுச் செலாவணியை நாங்கள் இங்கு எடுக்க முடியும் ஆனால் அந்நிய நாட்டுச்செலாவணியை வெளியிலே கொண்டு செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது. உள்ளூர் உற்பத்தியை பெருக்க வேண்டும். விவசாயத்தை பெருக்க வேண்டும் இவ்வாறு செய்யும் பொழுது தான் எதிர்வரும் காலத்திலே கொரோனா போன்ற இன்னும் பல நோய்கள் அல்லது உபாதைகள் அல்லது இவ்வாறு கெமிக்கல் வெப்பன்ஸ் அல்லது கெமிக்கல்கள் உடைய தாக்குதல்கள் இந்த நாட்டிலே வராமல் நாட்டை ஒரு வளம் பெற்ற நாடாக மாற்ற நாம் முயற்சிக்க வேண்டும்.

**தற்பொழுது இருக்கக்கூடிய ஜனாதிபதி இந்த நாட்டில் கடந்த காலங்களில் இனப்படுகொலைகளை மேற்கொண்டு 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை கொன்றார் என்ற குற்றச்சாட்டு ஐக்கிய நாடுகள் சபையிலும் கூட இருக்கிறது. இருந்தாலும் அவர் பாதுகாக்க வேண்டும் என்று முனைப்புடன் செயற்படுவது என்பது பாராட்டத்தக்க விடயம். அதுபோன்று அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.**

இலங்கையில் கொரோனா தொற்று பரவுவதற்கு இத்தாலியில் இருந்து வந்தவர்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த மதபோதகருமே காரணமாவார்கள்.

இத்தாலியிலிருந்து கப்பல்களின் மூலம் 1500 க்கு மேற்பட்டோர் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் மறைந்து வாழ்கின்றார்கள் ஆகவே அவர்களை கண்டறிந்து பிடிக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஆனால் உயிருக்கு போராடுபவர்கள் இந்த நாட்டில் இருக்கும் பொழுது அவர்களை தனிமைப்படுத்தி வைக்க வேண்டிய தேவையும் இருக்கிறது.

இந்த நாட்டிலே எந்தந்த பகுதிகளிலே இவ்வாறான கொரோனா நோய்த்தொற்றுக் குட்பட்டவர்கள் இருந்தாலும் நீங்கள் இராணுவத்தினரிடமோ அல்லது அதற்குரிய சுகாதார திணைக்களத்திடமோ சரணடைந்து. நாட்டில் இருக்கக்கூடிய 2 கோடி மக்களையாவது காப்பாற்றுவதற்கான நடவடிக்கைக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லாது போனால் அரசாங்கத்திடம் ஒரு வேண்டுகோளை விடவேண்டிய தேவை இருக்கிறது. இவ்வாறானவர்களை கருணைக்கொலை செய்யுங்கள். கருணை முறையிலே கொலை செய்தால் ஏனையவர்களை காப்பாற்றக்கூடிய சூழல் உருவாகும்.

அரியாலையிலே மதபோதகர் ஒருவர் அவருடைய சபையிலே வந்து நடந்த சம்பவத்தைப் பார்த்தோமானால். யாழ் குடா நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தொற்றிவிடும் என்ற ரீதியிலே இருக்கிறார்கள். இருவரிற்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

அந்த கூட்டத்திலே கிட்டத்தட்ட 300 க்கும் மேற்பட்டோர்கள் அதிலே கலந்து கொண்டுள்ளார்கள். இதிலே பலர் இன்னும் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறானவர்களை தெரிந்தால் அயலில் இருக்கிறவர்கள் நேரடியாகவே பொலிஸாரிற்கு தகவல்களை கொடுப்பதனூடாக கண்டறிய முடியும்.

மதபோதகர் சற்குணராசா என்பவர் அனைவரதும் தலையிலே கையை வைத்து ஜெபித்து இருக்கின்றார். அவருக்கே அந்த தொற்று வந்திருக்கிறது. ஒரு இறை நம்பிக்கை மற்றும் அவரின் மறுபக்கத்தில் அதாவது பின்னணிகள் வேறு விதமாக இருக்கிறது. இது எவ்வாறிருப்பினும் வட பகுதியிலே இவ்வாறானதொரு கொரோனா தொற்றை கொண்டுவந்து பரப்பியிருப்பதும் அவர் தான்.

ஆகவே சரணடையாதவர்கள் அல்லது ஒழித்திருப்பவர்களுக்கு காலக்கெடு கொடுப்பதற்கு நேரமில்லை. ஆகவே அவர்களை கருணைக்கொலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஊரடங்கு சட்டத்தை அமுல் படுத்தி செய்வதனூடாகத் தான் இந்த நாட்டில் கட்டுப்படுத்த முடியும்.

ஏனென்றால் சீனாவிலே 50 ஆயிரம். 60



ஆயிரம் இலட்சக்கணக்கான மக்களை கருணைக்கொலை செய்து விட்டார்கள் சீன அரசாங்கம். அதுபோன்று இன்னும் பல நாடுகள் தங்களுடைய நாட்டிலே கொரியா போன்ற நாடுகள் ஈராக். ஈரான் போன்ற நாடுகளிலே கருணைக்கொலை இடம் பெற்றுக்கொண்டு இருக்கின்றன இது தவறல்ல. காரணம் என்னவென்றால் இவர்களினால் பல கோடிக்கணக்கான மக்களுடைய உயிர் இந்த நாட்டிலிருந்து பிரிந்து செல்லப்போகின்றது.

ஆகவே அமெரிக்கா இந்த கெமிக்கலை தயாரித்ததால் சீனா தயாரித்ததற்கு அப்பால் சீன நாடுகள். அமெரிக்க நாடுகளை எதிர்ப்பதற்கு இலங்கையால் முடியாத ஒரு சூழல் உருவாகியிருக்கிறது. இதுவரையிலும் கிட்டத்தட்ட 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இலங்கையிலே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதனுடைய காரணம் என்ன? தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் கூட இவ்வாறான ஒரு ஊரடங்கு சட்டம் விடுக்கப்படவில்லை. ஒரு பக்கத்திலே சண்டை நடந்து கொண்டிருந்தாலும் மறுபக்கத்திலே அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றுக்கொண்டு தான் இருந்தது. இராணுவம் குண்டு போடும் பொழுது அல்லது பிளாஸ்டிக் குண்டுகளைப்போடும் போதும் பங்கருக்குள்ளே பதுங்கி இருந்து விட்டு மக்கள் மீண்டும் வெளியிலே வந்து தங்களின் பணிகளை செய்வார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் இருந்த காலப்பகுதியிலே வடகிழக்கில் அந்நிய ஆக்கிரமிப்புக்கள் அதாவது இந்தியாவோ. அமெரிக்காவோ. சீனாவோ எந்த நாடும் வடக்குகிழக்கிலே கால் பதிக்காத வகையிலே கடல் பாதுகாப்பு. தரைப் பாதுகாப்பு. வான் பாதுகாப்பு போன்ற பாதுகாப்புக்களே தமிழீழ விடுதலைப்புலிகள் தம்வசம் வைத்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அவ்வாறான அந்தரக்ஸ் என்ற வைரஸ் கூட பல இடங்களிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அந்த அந்தரக்ஸ் வைரஸ் அனுப்பப்படவில்லை.

ஆகவே காலத்திற்கு காலம் வருகின்ற பொழுது ஒவ்வொரு நாடுகளும் தங்களை சுயபரிசோதனை செய்து கொள்வது போன்று நாடுகளிற்கிடையே பல்வேறு குழப்பங்களை உருவாக்குவதில் முன் நிற்கின்றார்கள். ஆனால் இந்த உலகப்போரானது மீண்டும் ஆயுதங்களை கொண்டு இடம் பெறப்போவதில்லை. இவ்வாறானதொரு கெமிக்கலினூடாக நூற்றுக்கணக்கான நாடுகளை அழித்துவிடக்கூடிய திறன் கொண்டதாக தற்பொழுது அமெரிக்கா திகழ்கிறது. ஆகவே உடனடியாக இலங்கையில் இருக்கக்கூடிய இராணுவக் கட்டமைப்பு அல்லது அதனுடைய புலனாய்வு கட்டமைப்பு அதனை வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

இந்தியாவினுடைய புலனாய்வு கட்டமைப்பு. அமெரிக்கா சீனாவின் புலனாய்வு கட்டமைப்பு அனைத்தும் இந்த இலங்கையில் குடிகொண்டு அவர்கள் எங்களுடைய நாட்டை தளமாக வைத்துக்கொண்டு தங்களுடைய செயற்பாடுகளை செயற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆகவே இந்த நாடு பொருளாதாரத்தில் வளர்வதனூடாக. விவசாயத்தில் வளர்வதனூடாக அந்நிய நாடுகளிலிருந்து நாம் ஒன்றைக்கூட இந்த நாட்டிற்குள் இறக்குமதி செய்யாது இங்கிருக்கும் உற்பத்திகளைவளர்த்துச்செல்வதனூடாக எதிர்வரும் காலங்களிலே எதிர்வருகின்ற இந்தஇரசாயனங்களின்தாக்கங்களிலிருந்து இந்தநாட்டைபாதுகாத்துக்கொள்ளக்கூடிய நிலைமை உருவாகும்.

ஆகவே தொடர்ந்தும் இந்த நாடு அசௌகரியமான நிலைகளை சந்தித்துக்கொண்டு இருக்கிறது. எப்படியும் ஆறு மாத காலங்களில் கொரோனாவை ஒழிக்க முடியாமல் போகுமானால் மக்களுடைய அன்றாட வாழ்க்கை பெரிதும் கேள்விக்குறியாக மாற்றப்படும்.

ஆகவே அனைவரும் இதனை உணர்ந்து செயற்படுவதனூடாக இந்த கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருப்பவர்களை ஒன்றில் குணப்படுத்துவதற்கான மருந்துவத்தை கண்டுபிடித்து அவர்களை குணப்படுத்த வேண்டும். அல்லது அவர்களை கருணைக்கொலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அல்லது போனால் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

ஞானியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 வெது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## நாட்டின் தேர்தலும் கொரோனா வைரஸும்

இலங்கையை பொறுத்த வரையில் நாட்டின் தேர்தல் இடம்பெற இருந்த இடத்தில் உலக நாட்டையே துயரத்தில் ஆழ்த்திய ஒரு சம்பவமாக கொரோனா வைரஸ் (COVID-19) பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது. உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் மனிப் பேரழிவு நிழத்தப்பட்டு வருகின்ற நிலையில் நாளுக்கு நாள் வைரஸ் தாக்கம் தீவிரமான அதிகரிப்பையே ஏற்படுத்தி வருகின்றது.

இந்த வைரஸ், ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவில் அதி தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்திவரும் நிலையில் உலக அளவில் ஒரேநாளில் மட்டும் 3 ஆயிரத்து 273 பேரின் உயிரை மாய்த்துள்ளது. இந்த வைரசுக்கு இதுவரை 601,519 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 27 ஆயிரத்து 441 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 454 பேர் வைரஸ் தொற்றுக்கு இலக்காகி குணமடைந்துள்ளனர்.

ஏனைய நாடுகளை விடவும் அமெரிக்காவில் வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளது. அத்துடன் அங்கு 401 உயிரிழப்பு பதிவாகியநிலையில்இன்றும்5உயிரிழப்புக்கள் பதிவாகி மொத்த உயிரிழப்பு ஆயிரத்து 701 ஆக உள்ளது. மேலும் ஒரே நாளில் 18 ஆயிரத்து 691 புதிய நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் ஒரே நாளில் 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை இதுவே முதல் தடவை என்கின்ற நிலையில் எதிர்வரும் நாட்களில் அங்கு கடும் பாதிப்பை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியான காலத்தில் கொரோனாவுக்கு எதிரான யுத்தத்தில் பெரும் நிதியை அமெரிக்கா ஒதுக்கியுள்ளது. கொரோனா நோய்த் தடுப்புக்காக இரண்டு இலட்சம் கோடி டொலர் மதிப்புடைய மீட்புத் திட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதனை தொடர்ந்து இலங்கையில் நோய்த்தொற்று சந்தேகத்தில் 199 பேரும், தொற்றுக்குள்ளானவர்கள் 109 பேரும், குணமடைந்தவர்கள் 09 பேரும் இன்று (28.03.2020) வரையான தரவுகளாக அறியப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் அரசியல்வாதிகள் பணத்தை செலவழித்து தேர்தலில் வெற்றி பெறுவதற்காக முந்தியடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தற்பொழுது அவர்கள் மக்களுக்கு உதவி செய்யும் நிலைப்பாட்டிலில்லை. குறித்த பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் தமக்கான உதவிக்கரங்கள் வடகிழக்கை சேர்ந்த அரசியல்வாதிகளால் ஏற்படுத்தி தரப்படுமா என்பதில் அனைத்து விடயங்களையும் மத்திய அரசாங்கம் கையாண்டு வருகின்றது. அதே நேரம் இதன் காரணமாக எதிர்வரும் தேர்தலில் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அறியமுடிகிறது. ஆகவே களத்தில் அனைத்து அரசியல்வாதிகளும் இறங்கி அல்லது அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுத்து இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் தமிழ் மக்களினுடைய மனதை வென்றெடுப்பதனூடாகவே எதிர்வரும் காலங்களில் தமக்கான சொந்த வாக்குவங்கியை தக்க வைத்துக்கொள்ள முடியும். கொரோனா தொற்று என்பது சீன நாட்டிலிருந்து பரவியது என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே ஒருவரையொருவர் குறை சொல்வதை விட்டுவிட்டு எமது தேசிய சுயநிர்ணய உரிமைக்கான நிலைப்பாடு தோற்றுவிடாது தமிழ் மக்கள் உரிய காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதே இன்றைய யதார்த்தபூர்வமான உண்மை.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**98**

அங்கு கணிசமான அளவு விவசாய மக்கள் இருப்பார்கள். இது கெரில்லாக்களுக்கான உணவுப் பொருட்களின் விநியோகத்தில் பாரியதொரு சாதக நிலைமையாகும். நம்பிக்கையான மக்களைக் கொண்டு மக்களிடத்தில் உணவுப் பொருட்களைப் பங்கிடுகின்ற நிலையங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி கெரில்லாப் படைப்பிரிவிற்கான விநியோகத்தைத் தரமாக மேற்கொள்ளலாம். இதனால் அரச படைத்தரப்பிலிருந்து ஆபத்துக்குள்ளாகின்ற விநியோகப் பாதைகளுக்காகச் செலவிடப்படும் பணமும் நேரமும் கூடியளவில் மிச்சப்படுத்தப்படுகின்றது. குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில் படைப்பிரிவின் ஆளணி எவ்வளவிற்குக் குறைவோ அவ்வளவிற்கு அதற்கான விநியோகமும் இலகுவானதாகும். மிக முக்கியமான பொருட்களை கமாக், போர்வை, நனையாத மேலாடைகள், நுளம்பு வலை, சப்பாத்து, மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்றன செயற்படும் பிரதேசத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில் பிரதேச மக்களைப் பொறுத்தவரையில் இவையனைத்தும் இன்றியமையாத முதல் தரப் பொருட்களாக விளங்குகின்றன.

இப்பொழுது தொடர்பாடல்பற்றிப் பார்ப்போம். சரியாகச் சொல்வதானால் தொடர்பேற்படுத்தல் குறித்த கடினங்கள் எதனையும் கொண்டதல்ல. இதற்காகப் போதுமான அளவு ஆட்களைத் தெரிவுசெய்தலும் அவசியமான பாதையைத் தேர்ந்தெடுத்தலும் கூடக் கடினமல்ல. ஏதாவதொரு தகவலை இன்னொரு பிரதேசத்திற்குப் பரிமாறும் போது அதன் நம்பகத்தன்மையில் தான் கடினம் உள்ளது. ஏனெனில் இதற்காகத் தொடர்ச்சியான தொடர்பைப் பேண வேண்டும். அத்துடன் பல மக்களை நம்ப வேண்டியும் ஏற்படுகின்றது. இதில் எங்கே ஆபத்துத் தோன்றுகின்றதென்றால் தொடர்ச்சியாக எதிரிப் பிரதேசத்தைக் கடக்கின்ற தொடர்பாளர்களில் ஒருவர் மடக்கப்படும் பொழுதேயாகும். தகவல் மிக முக்கியமற்றதென்றால் அதனை வாய்வழி மூலம் பரிமாறப்படுகின்ற சில தகவல்கள் சில சமயங்களில் பூரணமாகத் திரிபடைந்துள்ளன.

சாத்தியமற்ற சகல சூழ்நிலைகளும் கூடுதலாக வேலையைச் சிரமமாக்கின்ற காரணத்தால் கெரில்லாக்களின் உற்பத்தித் தொழிற்சாலைகள் இங்கே மிகக் குறைந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. சப்பாத்துத் தொழிற்சாலைகளையோ ஆயுதத் திருத்தச் சாலைகளையோ உருவாக்கக்கூடாது. குறித்த தருணத்தில் மிகவும் முக்கியமானவற்றை (சுடுகலனுக்கான ரவைகள், சில வகைக் கண்ணிவெடிகள் போன்ற சில) மாத்திரம் உற்பத்தி செய்யக்கூடிய நன்றாக மறைக்கப்பட்ட சிறிய ஆயுதத் திருத்தச்சாலையை உருவாக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இதற்குப் பதிலாக கெரில்லாக்களிடம் அனுதாபம் கொண்ட மக்கள் வாழ் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட திருத்தச்சாலைகளின் உதவியையும் எதிர் பார்க்கலாம். இத்திருத்தச்சாலைகளை சகல சாத்தியமான வேலைகளுக்காகவும் பயன்படுத்தலாம்.



மேலே கூறப்பட்டவற்றிலிருந்து இரண்டு முடிவுகள் வெளியாகின்றன. முதலாவது யாதெனில் கெரில்லாக்களுக்கான நிலையான வாழ்க்கைச் சாத்தியம் அப்பிரதேச இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு எதிர்மறைப் பொருத்தமானதாகும். பிரதேசமொன்றின் சகல சாத்திய நிலைமைகள் மனிதனை அங்கே தங்கத் தூண்டுகின்றது. ஆனால் கெரில்லாக்களுக்கோ சகலதும் எதிர்மாறாகும். மனிதனின் வாழ்வை இலகுவாக்குகின்ற சாத்தியச் சூழ்நிலை எவ்வளவிற்குக் கூடவோ, அவ்வளவிற்கு அதிக அலைச்சலானதும் அமைதியற்றதுமான வாழ்க்கை அமையும். ஆகவே தான் இவ் விடயத்திற்கான தலைப்பு " சாத்தியமற்ற பிரதேசத்தில் சமர்" என அழைக்கப்படுகின்றது. அதாவது மனித வாழ்க்கைக்கு சாத்தியமானவை - போக்குவரத்துப்பாதைகள், நகரமும் அதன் சுற்றுப்புறமும் மக்கள் ஒன்றுகுவிந்த நிலை வாகனங்களால் சீர்திருத்தப்படும் தரை போன்ற பல விடயங்கள் யாவும் கெரில்லாக்களைச் சாத்தியமற்ற சூழ்நிலைக்குள் தள்ளிவிடுகின்றன. இரண்டாவது முடிவு யாதெனில் சாத்தியமற்ற பிரதேசத்தில் குறிப்பாக முக்கியமான பொதுமக்களுடனானநெருக்கமான தொடர்பைப் பேணுதல் எப்பொழுதும் கெரில்லாக்களுக்கு முக்கியமானால் அதாவது அங்கே எதிரித் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் ஒரேயொரு தாக்குதல் கூட கெரில்லாப் படைப்பிரிவின் பூரண அழிவிற்குக் கொண்டு சென்றுவிடலாம்.

இங்கே பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் கெரில்லாக்களுடனான குறித்த பிரதேசத்தின் மக்களது பூரண பங்களிப்பைத் தொடர்ச்சியாகஎட்டவும்வேண்டும். பிரதேச மக்களுடனான பூரண பங்களிப்பைத் தொடர்ச்சியாக எட்டவும் வேண்டும். பிரதேச மக்களுடனான தொடர்பைப் பலப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் போது ஆபத்தைத் தருபவனாக எதிரி இருந்தால் அயோக்கியத்தனமான அவனை இரக்கமின்றிக் கொல்ல வேண்டிய அவசியத்தைப்பற்றி ஏனைய பரப்புரைகளுடன் சேர்த்துக் கூறவேண்டியதை மறக்க வேண்டாம். இந்த விடயத்தில் கெரில்லாக்கள் தீர்க்கமாகச் செயற்பட வேண்டும். ஏனெனில் பாதுகாப்பற்ற பிரதேசமாக விளங்குகின்ற இடங்களில் எதிரி இருக்கமாட்டான்.

நகர்ப்புறப் பகுதிகளில் கெரில்லாக்களின் செயற்பாடுகள் சமரினது கட்டங்களிலொன்றில் கெரில்லாக்கள் நகரின் சுற்றுப் புறத்திற்குள் நுழைகின்றார்கள். அங்கே ஒப்பீட்டளவில் பாதுகாப்பான இடத்தில் அவர்கள் தங்கலாம். முன்னேற்பாடான குறித்த தயார்ப்படுத்தலை அவர்கள் கடந்திருக்க வேண்டும். வேறுவிதமாகச் சொல்வதானால் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

அவசியம் குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் நகர்ப்புறப் பிரதேசத்தில் செயற்படுகின்ற கெரில்லாப்படைப்பிரிவுஇயல்பாகத் தோற்றமடைவதில்லை. படைப் பிரிவின் வாழ்க்கைக்கு அவசியமான சூழல் இருக்கின்றதென்பது தெரிந்ததன்பின்னர்மாத்திரமேஅது உருவாக்கப்படுகின்றது. நகர்ப்புற பிரதேசத்தில் செயற்படுகின்ற கெரில்லாப் படைப்பிரிவு பிறிதொரு பிரதேசத்திலிருக்கின்ற கட்டளையாளர்களின் ஆணைக்குக் கீழ்ப்பட்டுச் செயற்படுகின்றது. ஆகவே தான் இப்படைப்பிரிவின் பணிகளுக்குள் சுயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இப்படைப்பிரிவு பூரணமாக மூலோபாயத் திட்டத்திற்கமையச் செயற்பட வேண்டும்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ள கொரோனாவின் ஒரு வரலாற்று பதிவு

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உலக சுகாதார நிறுவனத்தின் வருடாந்தர கூட்டம் அதன் தலைமையகமான ஜெனீவாவில் நடைபெற்றது. வைராலுயஸ்டுகள், பாக்டீரியாலஸ்டுகள் நோய்த் தொற்று நிபுணர்கள் என்று பலர் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் உலகை அச்சுறுத்தக்கூடிய நோய்களின் பட்டியலை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டது.

கிரீமியன், காங்கோ காய்ச்சல், Ebola வைரஸ் நோய், Las-sa காய்ச்சல், Sars, Mers மற்றும் Nipah வைரஸ், ரிப் பள்ளத்தாக்கு காய்ச்சல், ஜிகாஸ் வைரஸ் என ஏழு நோய்களை பட்டியலிட்டிருந்த உலக சுகாதார நிறுவனம் எட்டாவதாக ஒரு நோயையும் சேர்த்து இருந்தது. அது டீசிஸ் - X என்று சொல்லப்படும் Xநோய். அது எங்கிருந்து வருகிறது எப்படி வருகிறது என்றெல்லாம் தெரியாது. ஆனால் திடீரென வந்துகொத்துக்கொத்தாக உயிர்களை அள்ளிக்கொண்டு போகும் ஒரு புதுவகையான நோய்க்கு Xநோய் என்று பெயரிட்டிருந்தனர் ஆராய்ச்சியாளர்கள்.

எந்த தகவலையும் அறியாத ஒன்றைப்பற்றி குறிப்பிடும் போது X என்று சொல்வது வழமை. அதனடிப்படையிலேயே X நோய் என்று அந்த நோய்க்கு பெயரிடப்பட்டது. வருங்காலத்தில் மனித சமூகத்தை அச்சுறுத்தும் நோய் என பட்டியலிடப்பட்டுள்ள அந்த Xநோய் இயற்கையாக உருவாகலாம் அல்லது செயற்கையாக மனிதனால் உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். இரசாயன ஆயுதங்கள் இத்தகைய உயிர்க்கொல்லி நோய்களை பரப்பி மக்களை கொலை நடுங்கச் செய்யலாம். கொத்துக்கொத்தாக கொல்லலாம். அந்த நோய்களை பரப்பும் வைரஸ்களை கண்டறிந்து அவற்றிற்கு மருந்து தயாரிக்க பல மாதங்கள் பிடிக்கும் நிலையில் அதற்குள் பல் லா யி ர க் க ண க் கா னோ ர் மடியக்கூடிய சூழல் ஏற்படலாம் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கைவிடுத்திருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் விடுக்கப்பட்ட அந்த எச்சரிக்கை எரிமலையாக வெடித்துக்கொண்டிருக்கிறது.

Corona வைரஸால் சீனா பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உலகமே பதறிக்கொண்டிருக்கிறது. கொடிய நோய்கள் தாக்குவதும் அதனால் கொத்துக்கொத்தாக மக்கள் மடிந்து போவதும் இந்த உலகிற்கு புதிய நிகழ்வல்ல. ஒவ்வொரு நூற்றாண்டிலும் அறியப்படாத நோய்கள் உருவாகி பல்லாயிரம் பேரை பழிவாங்கி இருக்கின்றன. அதிலும் குறிப்பிட்ட இடைவெளியில் உருவான கொள்ளை நோய்களால் உலக வரலாறு கறுப்பு வண்ணம் பூசிக்கொண்ட காலகட்டங்கள் ஏராளம். கி.பி 1720 ஆம் ஆண்டு பிரான்ஸ் தேசத்தில் பரவிய பிளேக் நோயால் சுமார் ஒரு இலட்சம் பேர் உயிரிழந்தனர். நூறாண்டு கால இடைவெளியில் 1820 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் பரவிய காலரா நோய் இலட்சம் பேரை காவு கொண்டது. மீண்டும் 1920 இல் இதே போன்றதொரு துயரம் நிகழ்ந்தது.


**வேட்டை புலி**

உலகம் முழுவதும் 10 கோடி பேரை பழிவாங்கிய ஸ்பானிஸ் Spanish Flu 1918 ,ல் இருந்து 1920 ஆம் ஆண்டு வரை தன் கோரத்தாண்டவத்தை நிகழ்த்தியது. இவ்வாறாக உலகம் முழுவதும் கொள்ளை நோய்கள் தங்கள் கோர முகத்தை காட்டியிருந்தாலும் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே பல்வேறு வைரஸ் நோய்களின் தாக்குதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நோய்களின் நூற்றாண்டு கால இடைவெளி வரலாற்றை இட்டு நிரப்பும் விதமாக இதோ 2020 இல் உலகை அலற வைத்திருக்கிறது கொரோனா வைரஸ்.

21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சீனாவின் மீது ஒரு துயரம் படிந்தது. எங்கிருந்து வந்தது எப்படி வந்தது என்று தெரியாமலேயே சீனாவில் தென்பட்டது சார்ஸ் எனும் நோய். 2003 ஆம் ஆண்டு சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் இந்நோய் கண்டறியப்பட்டது. சீனாவைக் கடந்து சர்வதேசங்களிலும் பரவிய சார்ஸ் 26 நாடுகளில் 8 ஆயிரம் பேரை பாதித்தது. Severe Acute Respiratory Syndrome (SARS) என்பதன் சுருக்கம் தான் சார்ஸ்.

சாதாரண காய்ச்சல், தலைவலியுடன் தொடங்கும் சார்ஸ் நோய் இரண்டாவது வாரத்தில் மூச்சுத்திணறலை கொண்டு வந்து சேர்க்கும். பின்னர் சுவாசப்பிரச்சனைகள் தோன்றி உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும். மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவிய சார்ஸ் நோயும் ஒருவகையான கொரோனா வைரஸால் ஏற்படுவது தான். சீனாவில் மட்டும் 744 பேரின் உயிரைப் பறித்த சார்ஸ் நோய்க்கு இதுவரை எந்தவிதமான மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. 21 ஆம் நூற்றாண்டின் மிக மோசமான நோயாக பார்க்கப்பட்ட சார்ஸ்க்கு எந்த விதத்திலும் சளைத்ததல்ல ஜெபோலா.

1976 ஆம் ஆண்டு சூடானின் நிசாரா என்ற நகரில் ஓர் அபாயகரமான வைரஸின் அறிமுகப்படலம் தொடங்கியது. அங்குள்ள பருத்தி ஆலையில் பணிபுரிந்த மூன்று பேர் அடுத்தடுத்து உயிரிழந்தனர். மூவரிற்கும் தீவிரமான காய்ச்சல் தலைவலி மற்றும் நெஞ்சுவலி இருநது வந்தது. நோய்வாய்ப்பட்ட ஐந்தாம் நாளில் அவர்களின் மூக்கு மற்றும் பல் ஈர்களில் இரத்தம் கசிய ஆரம்பித்தது. நோயின் வீரியம் கூடிய நிலையில் சிகிச்சை பலனின்றி அந்த மூன்று பேரும் இறந்து விட்டனர். ஆனால் இழப்புக்கள் அத்தோடு முடியவில்லை. அவர்களுக்கு சிகிச்சையளித்த செவிலியர்கள் அவர்களை பராமரித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்று பலரையும் பற்றிக்கொண்ட புதுவகையான அந்த நோய் கருணையின்றி அவர்களின் உயிரை காவு வாங்கியது. நிசாராவில் உயிரைக்குடிக்கும் நோய் ஒன்று உக்கிரமாக பரவிக்கொண்டிருந்த வேளையில் அதனைப் பற்றி அறியாத சகோதரர்கள் இருவர் அங்கிருந்து 128 Km தொலைவில் உள்ள மரிடி எனும் நகரத்திற்கு சென்றனர். மரிடியில் மூத்த சகோதரரிற்கு நோய் அறிகுறிகள் தென்பட்டதால் அவர் மருத்துவமனைக்கு செல்ல அவர் மூலம் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் சிகிச்சை பெற வந்தவர்கள் என பலருக்கும் ஆட்கொல்லி நோய் பரவத்தொடங்கியது.




நோய்வாய்ப்பட்டவர்களில் 50 சதவிகிதம் பேர் உயிரிழந்து போக உலக சுகாதார நிறுவனம்உடனடியாக அங்குதனது ஆய்வுக்குழுவை அனுப்பியது. மரிடி மருத்துவமனையில் பணிபுரிந்த 153 செவிலியரில் 61 பேரிற்கு நோய்த்தொற்று ஏற்பட்டு அவர்களில் 31 பேர் உயிரிழந்தனர். நோயாளர்களிடம்நெருங்கிப்பழகிய நபர்களிடையே நோய்த்தொற்று ஏற்படுவதை உணர்ந்த ஆய்வுக்குழுவினர் நோயாளர்களை தனிமைப்படுத்தி வைத்தனர். சுகாதார பணியாளர்களுக்கு கையுறைகள், முகமூடிகள், பாதுகாப்பு உடைகள் வழங்கப்பட்டன. அதன் பின்னரே நோய்ப்பரவல் கட்டுப்படுத்த ஆரம்பித்தது.

அதேநேரம்காங்கோவின்யாம்புக்கு கிராமத்திலுள்ள கத்தோலிக்க மிசன் மருத்துவமனையில் 20 க்கும் மேற்பட்ட நோயாளிகள் ஒரே அறிகுறிகளுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலர் இரத்த வாந்தி, மூக்கில் இரத்தம் வடிதல், இரத்தத்துடன் கூடிய வயிற்றுப்போக்கு ஆகிய பிரச்சனைகளால் அவதிப்பட்டு வந்தனர். நோயின் தாக்கம் தீவிரமடைந்த நிலையில் 14 பேர் உயிரிழந்தனர். பின்னர் மருத்துவ பணியாளர்களுக்கு நோய்த்தொற்று ஏற்பட்டு அவர்களும் இறக்க மருத்துவமனையே மூடப்பட்டது.

நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 80 சதவீதம் பேர் உயிரழந்தனர். அதிகளவில் நோய் பரவிய நிலையில் யாம்புக்கு பகுதியில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மக்கள் யாம்புக்கு பகுதிக்குள் நுழைவதும் அங்கிருந்த வெளியேறுவதும் தடை செய்யப்பட்டது. இதனையடுத்து அங்கு வந்த பன்னாட்டு குழு பொது மக்களிடம் நோய் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியது. நோயாளிகளை தனிமைப்படுத்தி சிகிச்சையளித்து நோய்ப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

ஆராய்ச்சியாளர்களின் நீண்ட போராட்டத்திற்கு பின்னர் ஆபிரிக்க பகுதிகளில் பரவிய இந்த நோய்க்கு காரணமான வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு Ebola வைரஸ் என பெயரிடப்பட்டது. காங்கோ குடியரசில் யாம்புக்கு பகுதியிலிருந்து 60 Km தொலைவிலுள்ள Epola என்ற ஆற்றின் பெயரே வைரஸின பெயராக மாறிப்போனது. அப்பொழுது முதல் அவ்வப்போது வந்து ஆபிரிக்க நாடுகளுக்கு மரண பயத்தை காட்டிப்போவது இந்த வைரஸின் வழக்கம்.வெளவால்கள், மனித குரங்குகள் போன்ற விலங்குகளிடம் இருந்தும் மனிதர்களுக்கும், மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கும் பரவக்கூடியது Epola வைரஸ்.

இந்த நோய் தாக்கிய ஒருவரின் வியர்வை, எச்சில், கண்ணீர், சிறுநீர், இரத்தம், விந்து போன்றவை மற்றவர்களின் உடலுக்குள் செல்வதால் Epola பரவும். Epola தாக்கிய விலங்குகளின் இறைச்சியை உண்பது, இறந்தவர்களின் சடலத்தை தொடுவது ஆகியவை Epola தொற்றுக்கு வழிவகுக்கும். 1976 ஆம் ஆண்டோடு Epola வின் கதை முடிந்துவிடவில்லை. கடந்த 2013 ஆம்ஆண்டுமுதல்2016ஆம்ஆண்டு வரை Liberia, Guinea, Sieara, Leone பகுதிகளில் தீவிரமாக பரவிய Epola தொற்றால் 11 ஆயிரத்து 300 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மத்திய ஆபிரிக்க பகுதிகளில் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 1800 பேர் வரை காவு வாங்கியது Epola. 40 ஆண்டுகளுக்கும் மேலாக பல்லாயிரம் உயிர்களை பழிவாங்கிக் கொண்டிருக்கும் Epola விற்கு தற்பொழுது வரை மருந்து கண்டறியப்படவில்லை என்பது கசப்பான உண்மை.

Epola லாவின் ஜெராக்சாக இருக்குமோ என்று அனைவரையும் பதற வைத்த நோய் Mers. சாதாரண காய்ச்சலோடு தொடங்கும் இந்த நோய் தலைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு என நீண்டு நிமோனியாவின் அறிகுறிகளுக்கு மாறும். சுவாசப்பிரச்சனைகள் அதிகரிக்கும் போது மனிதனை மரணத்தின் வாயில் கொண்டு போய் நிறுத்தும் நோய் Mers. மத்திய கிழக்கு நாடுகளில் 2012 ஆம் ஆண்டு ஜீன் மாதம் தென்படத்தொடங்கிய இந்த நோய் தற்பொழுது உலகம் முழுவதும் 27 நாடுகளில் பரவியிருக்கிறது.

5ஆம் பக்கம் பார்க்க...

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

சவுதி அரேபியாவில் நோய்த்தாக்குதலுக்கு ஆளான ஒருவரை பரிசோதித்த எகிப்திய வைராலிஜிஸ்ட் அலி முகமது சஜி புதுவகையான வைரஸ் ஒன்றை கண்டறிந்தார். அதே அறிகுறிகளுடன் இரண்டாவதாக ஒருவர் செப்டம்பர் மாதம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதன்பின்னர் பாரபட்டமின்றி பரவத்தொடங்கியது Mers நோய். சவுதிஅரேபியாவில் Mers நோய் பாதித்த 44 வயதுடைய நபரொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து போனார்.

அவரிற்கு சொந்தமாக ஒன்பது ஒட்டகங்கள் இருந்தன. நோய்வாய்ப்படுவதற்கு முன் அவர் தான் அந்த ஒட்டகங்களை பராமரித்து வந்தார். அப்பொழுது ஒட்டகங்களிற்கான மருந்தை அவற்றின் மூக்குவழியாக அளித்து வந்தார் என்பதை அறிந்த மருந்துவ நிபுணர்கள் அவரின் உடலில் இருந்தும் ஒட்டகங்களின் உடலிலிருந்தும் மாதிரிகளை எடுத்து பரிசோதித்தனர். அப்பொழுது இரண்டு மாதிரிகளில் இருந்த வைரஸ்களும் ஒத்த அமைப்பை கொண்டிருந்ததை அறிந்தனர்.

நோய்த்தொற்று பரவியிருந்த விலங்குகளுடன் நெருங்கிப் பழகியதால் தான் Mers நோய் வந்திருக்கிறது என்ற முடிவிற்கு வந்திருந்த போது மத்திய கிழக்கு நாடுகளில் பலர் Mers க்கு இரையாகியிருந்தனர். விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவிய இந்த நோய் மனிதர்களிடமிருந்துமனிதர்களுக்கு வெகு வேகமாக பரவியது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மினாலோ, இருமினாலோ அல்லது எச்சில் துப்பினாலோ வெளியேறும் கிருமிகள் காற்றோடு கலந்து அருகில் இருப்பவர்களை பற்றிக்கொள்ளும். Mers நோயாளியுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர்க்கு ஆறு நாட்களில் Mers வருவது உறுதி. Mers நோய் தாக்கிய 10 பேரில் 4 பேர் உயிரிழந்து போனார்கள்.

உலகம் முழுக்க 2494 பேர் Mersநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் 858 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தார்கள். சவுதி அரேபியாவில் மட்டும் Mers நோயால் பாதிக்கப்பட்ட 2102 பேரில் 780 பேர் மரணமடைந்தனர். இதனையடுத்துமேற்பொள்ளப்பட்ட தீவிர தடுப்பு நடவடிக்கைகளால் Mers கட்டுக்குள் வந்தது. ஆனாலும் இந்த அபாயகரமான வைரஸ் நோயை அழிக்கவல்ல மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

2017 ஆம் ஆண்டு உலகின் 86 நாடுகளை பதம் பார்த்த Zika வைரஸ் தமிழகத்திலும் தடம் பதித்தது. காய்ச்சல், முதுகுவலி போன்ற அறிகுறிகளுடன் மருத்துவமனைக்கு வந்த கிருஸ்ணகிரி மாவட்டத்து இளைஞன் ஒருவருக்கு Zika வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டது. டெங்குகாய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்கள் தான் Zika வைரஸையும் தொற்ற வைக்கின்றன. Zika வைரஸ் உலகிற்கு புதிதான வைரஸ் அல்ல. 1947 ஆம் ஆண்டு உகாண்டாவிலுள்ள Zika எனும் வனப்பகுதியில் வசித்த குரங்குகளிடம் இவ்வகையான வைரஸ் கண்டறியப்பட்டது. அதனாலேயே Zika என்ற பெயர் பெற்றது. 1952 ஆம் ஆண்டில் உகாண்டா மற்றும் தன்சானியாவில் மனிதர்களுக்கும் Zika வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டது. 2015 இல் உலகின் பல நாடுகளை பற்றிக்கொண்ட Zika வைரஸ் இரண்டு ஆண்டுகள் கழித்து இந்தியாவிற்கும் வந்து சேர்ந்தது. மற்ற வைரஸ்களுடன் ஒப்பிடும் போதுZika வைரஸின் பாதிப்புக்கள் சற்று குறைவுதான். Zika வைரஸின் பாதிப்புக்களால் அதிக உயிர் சேதம் ஏற்படுவதில்லை.

ஆனால் கர்ப்பிணிகளுக்கு அதிக ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான வைரஸ் இதுதான். கர்ப்பம் தரித்த முதல் மூன்று மாதங்களில் ஒரு பெண்ணிற்கு Zika வைரஸ் தொற்று ஏற்பட்டால் பிறக்கும் குழந்தைக்கு நரம்பியல் பிரச்சனைகளும் மரபணு தொடர்பான பிரச்சனைகளும் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். ஏனைய வைரஸ் தொற்றுகளைப் போலவே Zika வைரஸ் தொற்றுக்கும் இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

உலகை உலுக்கிய பல வைரஸ் நோய்களில் சமீபத்தில் இந்தியாவை தாக்கியது Nipah வைரஸ். 1998 ஆம் ஆண்டு மலேசியாவில் பலர் காய்ச்சல், கழுத்துவலி, உடல்சோர்வு மற்றும் சுவாசப்பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக பன்றிப் பண்ணைகளில் பணிபுரிந்தவர்கள் இந்த நோயால் அதிகம் பாதிக்கப்பட்டனர். நோய் அறிகுறிகளைக் கொண்டு முதலில் ஜப்பானிய காய்ச்சல் வகையான ஜப்பானிஸ் எனசோபாலிட்டிஸ் என்று மருத்துவர்கள் நினைத்தனர். ஆனால் நோய்த்தொற்றுக்கு ஆளானவர்களில் ஐம்பது சதவிகிதம் பேர் உயிரிழந்து போக மர்ம மரணங்களிற்கு விடை தேடத் தொடங்கினர் விஞ்ஞானிகள்.

1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மலேசியாவில் நிகழ்ந்த மரணங்களிற்கு காரணமானது Nipah வைரஸ் என்பதை கண்டறிந்தனர். Sungai Nipah என்ற இடத்தில் இருந்த ஒருவரின் உடலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த வைரஸிற்கு Nipah வைரஸ் என்று பெயரிடப்பட்டது. விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவிய இந்த வைரஸின் மூலாதாரமாக பழந்தின்னி வெளவால்கள் இருந்திருக்கின்றன.

மலேசியாவில் வெளவால் மூலமாக பன்றிகளுக்கு பரவிய நோய் பின்னர் மனிதர்களுக்கு தொற்றியதாக சொல்லப்படுகிறது. வெளவால் கடித்த பழங்களை உண்டவர்கள் உடனடியாக Nipah வின் பாதிப்புக்கு ஆளானார்கள். தொடுதல், தும்மல், இருமல் மூலமாக Nipah வைரஸ் மனிதர்களுக்குள் வெகு வேகமாக பரவக்கூடியது. 2018 ஆம் ஆண்டு கேரளாவின் மளப்புறம் மற்றும் கோழிக்கோடு மாவட்டங்களில் Nipah வைரஸ் பரவியது. 17 பேரை பலிகொண்ட இந்த வைரஸின் தாக்குதல் தீவிர தடுப்பு நடவடிக்கைகளால் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால் Nipah வைரஸின் தாக்குதலுக்கு இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை.

**2019 ஆம் ஆண்டின் இறுதியில் புத்தாண்டை கொண்டாட தயாராகிக்கொண்டிருந்த சீனர்களை புரட்டிப்போட்டது (Corona Virus) கொரோனா வைரஸ்.**

சளி காய்ச்சலில் தொடங்கி பலரின் உயிரை பறித்த நோய் Corona வைரஸால் ஏற்படுகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

Corona வைரஸ் குடும்பத்தை சேர்ந்த ஒரு புது வகையான வைரஸ் அது என்பதை அறிந்த ஆராய்ச்சியாளர்கள் அதனை நாவல் Corona வைரஸ் என்று குறிக்கும் விதமாக 2019 ncov என்று பெயர் பெயரிட்டுள்ளனர்.

பொதுவாக விலங்குகளில் காணப்படும் இந்த Corona வைரஸ் குடும்பத்தில் மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆறு வகையான வைரஸ்கள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன.

**தற்பொழுது சீனாவில் தொடங்கி பரவிக்கொண்டிருப்பது ஏழாவது வகை Corona வைரஸ்.**


இதற்கு முன் உலகத்தை அச்சுறுத்திய Sars, Mers போன்ற நோய்களும் Corona வைரஸ் தாக்குதல்களால் ஏற்படுபவை தான். அந்த தாக்குதல்கள் ஏற்படும் நோய்களுக்கு Sars என்றும், Mers என்றும் பெயரிட்டுவிட்டதால் அவை வைரஸின் பெயரில் அழைக்கப்படுவதில்லை.

ஆனால் இந்த நாவல் Corona வைரஸ் தாக்குவதால் ஏற்படும் பாதிப்பிற்கு இன்னும் பெயரிடப்படவில்லை. அதனால் Corona வைரஸ் தாக்குதல் என்றே அழைக்கப்படுகிறது.

**இதுவரை உலகம் கண்ட பெரும்பாலான வைரஸ் நோய்கள் சாதாரண சளி காய்ச்சல் போன்ற பாதிப்புக்களில் இருந்துதான் தொடங்கி இருக்கின்றன. பெரும்பாலான உயிரிழப்புக்களும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் முதியவர்களுக்கு நிகழ்ந்திருக்கின்றன.**

எந்த தடுப்பு மருந்துகளும் கண்டுபிடிக்கப்படாத சூழலிலும் புழக்கத்தில் இருக்கின்ற மருந்து வகைகளை கொண்டு நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உலகமே Corona வைரஸ் தாக்குதலால் அச்சப்பட்டுக்கொண்டிருக்க கேரளத்திலிருந்துமருத்துவர்களும், சிவிலியர்களும் சீனாவிற்குச் செல்வதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இவர்களைப் போல தங்களிற்கும் நோய்த்தாக்கம் ஏற்படலாம் என்று அறிந்திருந்தும் பல்லாயிரக்கணக்கானோருக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் மருத்துவர்கள் சிவிலியர்கள் மற்றும் தன்னார்வளர்களின் மனிதம் இருக்கும் வரையிலும் எந்தவொரு ஆபத்தான வைரஸையும் இந்த உலகம் துணிச்சலுடன் எதிர்கொள்ளும்.



# அரசியல் இலாபத்துக்காகப் பெண்கள் பகடைக் காய்களாக்கப்படுகிறார்கள்




பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு சில நாட்களிலேயே குறிப்பிட்ட சில பெண் வேட்பாளர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள பால்நிலை சார்ந்த விமர்சனங்களையும் வன்முறையையும் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு உன்னிப்பாகக் கவனித்து வருவதுடன் இதனை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருப்பதன் மூல காரணிகள் பெண்கள் மீதும் அவர்களது தோற்றம், நடத்தை, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மற்றும் அவர்களது குடும்பம் சார்ந்தும் நடத்தப்படும் தாக்குதல்களாகும். மேலும் இந்நாட்டில் நடந்த தொடர்ச்சியான போர் மற்றும்ஏனைய வன்முறைகளால் மிகவும் பாதிக்கப்பட்டு இன்னுமே தீர்வு கிடைக்காத பட்சத்தில் தீர்வுகளை எதிர்பார்த்து தொடர்ந்து காத்திருக்கும் பெண்களைப் பிரிதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் அரசியல்வாதிகள் இன்னும் எதுவும் செய்ய முடியாத நிலைமை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் தமக்கு சமூகம் விதித்துள்ள கட்டுக்களைத் தாண்டி அரசியலில் பெண்களே பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பது பெண்களாகிய எங்களின் எதிர்ப்பார்ப்பாகும். எப்போதெல்லாம் பெண்கள் இச்சமூகக் கட்டுக்களைத் தாண்டி, தமக்கு ஏற்படப்போகும் சவால்களுக்கெல்லாம் முகம் கொடுக்கத் துணிந்து அரசியலில் இறங்குகின்றார்களோ அப்போதெல்லாம் எமது சமூகமும், குறிப்பாக ஆண்களும் ஊடகங்களும், சமூக வலைத் தளங்களும் அவர்களைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பேசுவதும் அவர்களை ஒரு போகப்பொருளாக்கி அவமானப்படுத்துவதும் எதிர்காலத்தில் பெண்கள் அரசியலில் ஈடுபடவே முடியாது என்பது போன்றதான ஒரு நிலைமையைத் தோற்றுவிப்பதை அவதானிக்க முடிகிறது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலிலும் தமிழ்க் கட்சிகள் பெண்களைத் தேர்தலில் நிறுத்தியிருப்பது பெண்கள் சார்ந்த தமிழ் அரசியற் பரப்பில் மிக முக்கியமான மாற்றமொன்றாக நாம் கருதினாலும் பெண்களை வரவேற்கக்கூடிய மன நிலையும் அவர்களை மரியாதையுடன் நடாத்தும் அரசியல் கலாசாரமும் தமிழ்பேசும் மக்களின் அரசியல் மனோ நிலையில் மாற்றம் ஏற்படாதிருப்பதையே காட்டுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாகவும்,காணாமற் போனோரைத் தேடும் பெண்கள் தொடர்பாகவும் பொதுவான பெண்கள் உரிமைகள் பற்றி அக்கறைப்படுவதாய் காட்டிகொள்ளும் ஆண்களும் கூட தேர்தலில் நிற்கும் பெண்கள் மீது இப்போது முடக்கி விடப்பட்டுள்ள வன்முறைகள் குறித்து மௌனம் காப்பதும் இன்னும் சில சந்தர்ப்பங்களில் இவ்வன்முறைகளில் பங்கெடுப்பது மிகவும் முரணாகவுமுள்ளது.



சில பெண்களின் சுய மரியாதையைக் கேள்விக்குட்படுத்துவதாக எண்ணிக்கொண்டு ஒட்டுமொத்தப் பெண்களின் சுயகௌரவத்தினையும் பாதிப்புக்குட்படுத்துவது மிகவும் வருத்தத்திற்குரியது. இப்போதுவரை மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் அதிகளவிலானை ஆண்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆண் அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் பாலியல் துஷ்பிரயோகங்கள், கையாடல்கள், சட்டவிரோத சொத்துக் குவிப்பு,கொள்ளைப் பிறழ்வுகள் குறித்து எதுவும் பேசத் தலைப்படாத சமூகம் பெண்களின் பால்நிலை நடத்தை சார்ந்து மட்டும் அவர்களை விமர்சிப்பது நகைப்புக்குரியது.

பெரும்பான்மை சமூகத்தில் இல்லாத அளவுக்குத் தமிழ் சமூகத்தில் இம்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரசியலிலுள்ள பெண்களுக்கெதிரான வன்முறை, சிறுபான்மையின முஸ்லிம் பெண்கள் இன்னுமே தேசியத் தேர்தலில் களத்தில் இறங்கத் தயக்கமான தன்மையை மேலும் ஏற்படுத்தியுள்ளதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

இச்சூழ்நிலை ஒரு வகையில் மீண்டும் அரசியல் இலாபத்துக்காகப் பெண்கள் பகடைக்காய் களாக்கப்படுகிறார் களோ என்ற சந்தேகத்தையும் தோற்றுவிக்கிறது.

"உள்ளூராட்சித் தேர்தலில் 25% ஒதுக்கீடு மூலம் உள்ளூராட்சி சபைகளில் அங்கத்தவர்களாக உள்ள பெண்கள் சபைகளில் பேச அனுமதி மறுக்கப்பட்டும், தரக்குறைவாக நடத்தப்பட்டும் வெறும் அங்கத்தவர்களாகவும் மட்டுமே சபைகளில் அமர்த்தப்பட்டிருப்பது தொடர்பில் நாம் இன்னும் தொடர்ச்சியான முறைப்பாடுகளைக் கேட்ட வண்ணமே இருக்கின்றோம்."

இது இவ்வாறிருக்க மிக முக்கியமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் பாராளுமன்றுக்கான தேர்தலிலும் ஆளுமை மிக்க திறமையான பெண்கள் போட்டியிட முடியாமல் அவர்களுக்கு விதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தடைகள் பாரதூரமானவை. இவை எல்லாம் ஒருவகையில் மிக ஆளுமை உடைய சமூகத்தில் பல ஆண்டுகள் மக்களுடன் ஒன்றி வேலை செய்த மக்களைத் தாழ்மைப்படுத்தும் கட்டமைப்புகளைத் துணிச்சலுடன் கேள்வி கேட்கும் பெண்கள் அரசியலில்வந்துவிட்டால்எங்கேதங்களது அதிகாரம் கைவிட்டுப்போய்விடுமோஎன்ற ஆண்களின் தாழ்வுமனப்பான்மையின் வெளிப்பாடோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பதையும் தவிர்க்க முடியாதுள்ளது.

மேலும் தற்போது அரசியலில் ஈடுபடவுள்ள ஆளுமைமிக்க பெண்கள் களத்தில் ஆற்றியுள்ள சேவைகள் மிகமுக்கியமானவையும் பாராட்டுக்குரியவையுமாகும். இருப்பினும் அவர்களின் சேவைகள் சார்ந்து ஆராயமல் விமர்சிப்பது கண்டனத்திற்குரியதாகும். சமூக வலைதளங்களில் போலியான பெயர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு பெண்கள் மீது அவதூறுகள் பரப்புவோர் மீதும் உண்மைகளுக்குப் புறம்பான செய்திகளை எந்த ஆதாரமுமின்றிப் பதிவுசெய்வோர் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கான கட்டமைப்புகள் மிக விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என நாம் கோரிக்கை விடுக்கிறோம்.

பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான பாதுகாப்பானதொரு சமூகத்தையும் அரசியற் கலாசாரத்தையும் கட்டியெழுப்புவதற்கான பணியில் ஈடுபடச் சமூகசேவை நிறுவனங்கள், அரசசார், அரசசாரா அமைப்புக்கள், பல்கலைக்கழகங்கள், சமூகத்தில் உயர் பதவியில் உள்ளோர், இளையோர் ,செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைவரிடமும் கோரிக்கை விடுக்கிறோம்.

பெண்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பெண்கள் மட்டுமேபெண்களுக்காகக்குரல்கொடுக்கும் கலாசாரம் மாறவேண்டும் என்பதையும் சமூகப் பிரக்ஞையுடைய எவரும் வேகமாக வளரும் நச்சுத்தன்மைமிக்க இத்தனிமனிதத் தாக்குதல் கலாச்சாரத்திற்கெதிராகக் குரல்கொடுக்க விரைவில் முன்வரவேண்டும் என்பதையும் இங்கே காத்திரமாகப் பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

பெண்களின் செயற்பாட்டிற்கான வலையமைப்பு என்பது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 9 மாவட்டங்களைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் 9 பெண்கள் குழுக்களின் கூட்டாகும்.

**நெற்றிபொறியன்**

# தமிழர் தாயகம் வடகிழக்கினை ஒன்றிணைத்து தமிழர்கள் தங்கள் சுயாட்சி உரிமையை மீட்டு எடுக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு இருக்கும் ஒற்றை தெரிவு போராட்டம் ஒன்றே

ஒரு இனம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் அந்த இனம் தனது மொழி, தனது பண்பாடு, தனது கலாச்சாரம், தனது பூர்விக நிலப்பரப்பு போன்றவற்றை பேணிக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

**இந்த காப்பாற்றும் தன்மையே அந்த இனத்தின் தொடக்கத்தையும் வாழ் வாதாரத்தின் முதன்மையையும் அறிமுகம் செய்து வைக்கும் காரணியாகின்றது. எதை யெல்லாம் உங்களால் பாதுகாக்க முடியவில்லையோ, அவையெல்லாம் உங்களைவிட்டு என்றாவது விலகிச் சென்றுவிடும்.**

இராஜதந்திர ரீதியாக சிங்கள மேட்டிமைவாத நிகழ்ச்சி நிரல் திரைமறைவைக் கடந்து விட்ட போதும் கடந்த நல்லாட்சி எனும் வெற்றுக் கோசத்தில் தமிழ் மக்கள் வெறுமையிலே தான் உள்ளனர். போர்க்காலத்தில் தமிழர் தாயகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இனவழிப்பு இராணுவம் மேலதிக அதிகரிப்புடன் இன்றும் ஆக்கிரமிப்பின் அடையாளமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. உயர்பாதுகாப்பு வலையங்கள் என்ற போர்வையில் இராணுவப்பிடிக்குள் விழுங்கப்பட்ட பல்லாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பும் தொடர்கின்றது.

சிங்கள ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் எல்லோரும் ஒரே இலக்கில் உள்ளவர்களே. அவர்கள் அந்த இலக்கை அடைய பயன்படுத்தும்வழிமுறைகளிலேயே வேறுபடுகிறார்கள்.

**"கடந்த நல்லாட்சி என்று உலகிற்கு காட்டிக்கொண்டு எமது மக்களை தன் இராணுவக் கண் காணிப்பினுள்ளும் பயப்பிராந்திக்குள்ளும் வைத்திருந்தது சிறிலங்கா அரச இராணுவ இயந்திரம். இணக்க அரசியல் செய்யும் அரசு அல்ல இணங்கி பின் இடர் விளைவிக்கும் அரசு. யாரும் எமக்கு தாம்பாளத்தில் தீர்வை தர போவதில்லை அக புற நெருக்கடிகளே எமக்கான தீர்வை பெற்று தரும்."**

ஈழத் தமிழ் மக்கள் தங்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கு, நீதி வேண்டிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கமே யுத்தத்தை தொடர்ந்தும் மாபெரும் வெற்றிச் சாதனையாக பெருமிதத்தை வெளிப்படுத்துகிறது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெளிவாக சில விடயங்களைச் சொல்லியிருக்கிறார். இலங்கை அரசாங்கம் ஒரு விசாரணையை நடத்தினால் அது எப்படியான விசாரணையாக அமையும் என்பதையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதை தெளிவாகச் சொல்லி இருக்கின்றார். இராணுவத்தை தண்டிக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்று மைத்திரி சொல்லி இருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் யுத்த வெற்றிக்கு இனப்படுகொலை யுத்தம் என்ற மறுபெயரும் உண்டு. நீதியையும் உண்மையையும் வழங்கும் ஒரு தரப்பு முதலில் அதனை ஏற்க வேண்டும்.

இராணுவம் இழைத்த குற்றங்களை மறைத்துக் கொண்டு இராணுவத்தை கண்ணை மூடிக்கொண்டு பாதுகாக்கும் போக்கில் நீதியும் உண்மையும் ஏற்படாது. தமிழ் மக்கள் போரில் எவ்வாறு எல்லாம் அழிக்கப்பட்டார்கள் என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் வந்துவிட்டன.

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தமிழ் இனவழிப்பானது வெவ்வேறு வடிவங்களில் தமிழர் தாயகத்தில் கடந்த நல்லாட்சி அரசு தொடர்ந்து நடத்தி வந்தது.

வடகிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி இம் மாகாணங்களில் இனவிகிதாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது சிங்கள அரசு.

கோரிக்கைகளை முன்வைப்பதும் வேண்டுகோள்களை விடுப்பதும் ஒருபோதும் மகாவம்சத்து கனவுகளை ஊடறுத்து பேரினவாதத்தின் காதுகளில் போய்சேரப்போவதில்லை என்பதே வரலாறு தரும் பாடமாகும். ஒற்றை ஆட்சிக்குள்ஏதாவதுஒருதீர்வுக்குள் முடங்கிப் போய்விடுங்கள் என்று வகுப்பு நடாத்தும் சம்பந்தன், சுமந்திரன், மாவை போன்றவர்களும், இந்திய வல்லாதிக்கமும் இன்றும் ஒரு வரலாற்றுப் பாடமாகும்.

தமிழ் இனம் தனக்கு வரலாற்றில் இழைக்கப்பட்ட கொடுமைகளை என்றும் மறந்து விடக்கூடாது மறைக்கவும் அனுமதிக்கக் கூடாது

நமது அடையாளங்கள் அழிக்கப்படும் போது... தமிழ் இனத்தின் உரிமை மறுக்கப்படும் போது... தமக்கான அதிகாரம் ஒடுக்கப்படும் போது... தனது இனத்தின் உரிமை,சமத்துவத்திற்காக ஒரே நோக்குடன் செல்லும் பாதையே போராட்டம். மக்கள் புரட்சி அரச பயங்கரவாதங்களுக்கும் முதலாளித்துவ சுரண்டல்களுக்கும் எதிராக வெடிக்க வேண்டும்.

இந்த உண்மையை மக்கள் முதலில் உணர வேண்டும். தமிழர் தாயகத்தில் தொடரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் தமிழின அடக்கு முறைகளுக்கு எதிராக நமக்கான போராட்டத்தை நாமே ஆரம்பிக்க வேண்டும். நேர்த்தியான கொள்கை வகுப்புடனும், சிறந்த திட்டமிடல் முகாமைத்துவத்துடனும் முன்னெடுக்கப்படும் மக்கள் மயப்பட்ட போராட்டம், எமக்கான நேச சக்திகளையும், எமக்கு சாதகமான அக, புறச்சூழல்களையும் உருவாக்கும்.

மாறாக, எமக்காக யாரும் போராடுவார்கள், யாராவது எமக்கு நீதியை தருவார்கள் என்ற எதிர்பார்ப்பில்காத்திருக்கமுடியாது.



நாம் போராடாமல் விடுகின்ற ஒவ்வொரு தருணத்திலும், நாம் சோர்வடைகின்ற ஒவ்வொரு கணப்பொழுதுகளிலும், யாரையும் நம்பி நாம் காத்திருக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், எமக்கான பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்வோர் சோரம்போகிற, சரணாகதியடைகிற ஒவ்வொரு சூழலிலும் எமது போராட்டம் நீர்த்துப் போகும். அந்தப் பலவீனமான நிலையென்பது எமது போராட்டத்தின் அடித்தளத்தை மெதுமெதுவாக ஆட்டம் காணச் செய்து, இறுதியில் எமது நீதிக்கான போராட்டத்தை முற்றுமுழுதாக அழித்துவிடும்.

1,46,679 தமிழர்களைப் படுகொலை செய்து அதை நம் கண் முன்னே மூடி மறைப்பதையும் வரலாறு பதிவு செய்து கொண்டு இருக்கிறது.

**"நாங்கள் சுதந்திரத்தை கேட்டோம் மரணத்தை தந்தார்கள் மரணத்தையும் வென்றோம் இனி எதை தர போகிறார்கள்...? நாம் இறந்தாலும் எமது தத்துவம் இறக்காது.. அது விதைக்கப்பட்டு விட்டது.. இழந்த உரிமைகளை கேட்டு பெற முடியாது மாறாக போராடிதான் பெற முடியும்."**

காக்கும் நல்வாழ்வுக்குமாக காட்டிகொடுக்கும் காக்கை வன்னியர்கள் விளைச்சல் அதிகரித்த இனத்தில் அவதாரங்கள் அவ்வப்போது தோன்றி அழிவிலிருந்து மக்களை காக்க தம் ஆயுளை முடித்து கொள்வார்.

தமிழர் தாயகம் வடகிழக்கினை ஒன்றிணைத்து தமிழர்கள் தங்கள் சுயாட்சி உரிமையை மீட்டு எடுக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு இருக்கும் ஒற்றை தெரிவு போராட்டம் ஒன்றே. அரசுகளால் மக்களுக்கு நீதி வழங்க முடியாது. போராடும் மக்களே தங்கள் உரிமையையும் விடுதலையையும் தாமே வென்றெடுக்க வேண்டும்.

போராடுவது ஒன்றே அடிமை தமிழர்தேசியத்திற்கு வழி!! போராடும் மக்களின் ஒன்றிணைவே அனைத்து போராட்டங்களுக்கும் வலு சேர்க்கும்!

ஆகவே, எமக்காக நாமே போராட வேண்டும். எமக்குநடந்த அநீதியை, இன அழிப்பை ஓங்கி ஒலித்து, உறுதியட நாமேசொல்ல வேண்டும். உறுதிகுன்றாத மனோதிடமும் போராட்டத்தின் இடைவிடாத தொடர்ச்சியும் நீதிக்கான எமது போராட்டங்களின் அடிநாதங்களில் முக்கியமான அம்சங்களில் ஒன்று.

"சிறந்த அரசியல்போராளியானவன் சிறந்த படைத்துறை வீரனாக இருக்க வேண்டும். அதாவது எமது மண்ணின் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீட்பதற்கு அல்லது எதிரி எமது நிலத்தைக் கபளீகரம் செய்வதைத் தடுப்பதற்கு நாம் சிந்துகின்ற இரத்தத்தின் விலை தெரிந்தவர்கள் அரசியலை நடத்துபவர்களாக இருக்க வேண்டும்."

தமிழீழ விடுதலை போராட்டம் என்பது பல விடுதலை பயிர்களின் உயிர்களை விதைத்திருக்கும் வெளி. தாயக மக்களின் அவலம் போக்கும் மக்கள் திரள் போராட்டங்கள் புலம் பெயர்ந்து தமிழர்கள் வாழும் தேசங்களில் முன்னெடுக்க வேண்டும். இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தொடர் செயல்பாடுகள் புலம் பெயர்ந்த மக்களால் கருத்து வேறுபாடு இன்றி நிகழ்த்த வேண்டும்.

மாயைகளையும் வார்த்தை ஜாலங்களையும் ஏமாற்றும் முயற்சிகளையும் தாண்டி, அர்ப்பணிப்புகளை நெஞ்சினில் தாங்கி நேர்மையுடனும் மனச்சாட்சியுடனும் இனத்தின் நலனுக்காய் தொடர்ந்தும் கொள்கை உறுதியுடன் நடப்போம்! மீண்டெழும் காலம் மறுபடியும் உருவாகும்..மாண்டவர் கனவும் பலிக்கும்.


சிங்கள தேசத்தின் வெற்றிக் கொண்டாட்டமும், தமிழர் மீதான வதை முகாம் கொடுமைகளும், அச்சுறுத்தல்களும், கடத்தல்களும், படு கொலைகளும், காணாமல் ஆக்குதல்களும் முன்னரை விடவும் பலமான எதிர்வினைகளை உருவாக்கியே தீரும். அந்த எதிர்வினை, ஈழத் தமிழர்களை மட்டுமல்ல, உலகில் வாழும் எல்லாத் தமிழர்களையும் ஒன்றிணைக்கும்.

அந்த மாபெரும் தமிழர் எழுச்சி ஈழத் தமிழர்களை வெகு விரைவில் விடுவிக்கும். அதுவே விடுதலைப் புலிகளின் தியாகத்திற்கு உலகத் தமிழினம் வழங்கும் கௌரவமாக அமையும். தமிழீழம் மீளும் நாளை தமிழே ஆளும்!

**நெற்றிப்பொறியன்**



# பிராந்தியச் செய்திகள்



## கொரோனா வைரஸினால் உயிரிழந்த முதலாவது இலங்கையரின் உடல் தகனம்

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்த முதலாவது இலங்கை பிரஜையின் உடல் சற்றுமுன்னர் கொட்டிகாவத்தை மயானத்தில் கடும் பாதுகாப்பு மற்றும் சர்வதேச சுகாதார விவரக்குறிப்புகளின் கீழ் தகனம் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளாகி அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவரே அன்று (சனிக்கிழமை) உயிரிழந்தார்.

மாரவில பகுதியை சேர்ந்த 60 வயதுடைய குறித்த நபர் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கொழும்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில பகுதிகளுக்கான ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நீடிப்பு

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு சட்டம் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படும்.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்கு உதவும் நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே என்பதால் அந்த நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பொறுப்புடன் பின்பற்றுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் அடுலுகம மற்றும் கண்டி மாவட்டத்தில் அகுரணை கிராமங்கள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக குறிப்பிடப்பட்டள்ளன.

எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.




## யாழ். நகரில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் கொமாண்டோ அணி!

யாழ்ப்பாண நகரில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் கொமாண்டோ அணி களமிறக்கப்பட்டது.தற்பொழுது நாட்டின் பல்வேறு இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் மிகவும் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் அன்றைய(2020.03.29) தினம் யாழ்ப்பாண நகரப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் மோட்டார சைக்கிள் கொமாண்டோ அணி களமிறக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் களமிறங்கிய மோட்டார் சைக்கிள் கொமாண்டோ அணியினர் மீண்டும் தற்பொழுது கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக யாழ்ப்பாண நகரில் களமிறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அன்றைய(2020.03.27) தினம் அனுமதிக்கப்பட்ட இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த இருவரும் தற்போது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் ஏறனும் வைத்தியசாலை பணிப்பாளர் அன்று (ஞாயிற்றுக்கிழமை) உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுவரை யாழ்ப்பாணத்தில் 36 பேர் கொரோனா வைரஸ் பரவியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைகளின் பின்னர் வெளியேறியுள்ளனர்.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கே கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பிணை வழங்கக்கூடிய 1460 கைதிகளுக்கு விடுதலை

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள, பிணை வழங்கக்கூடிய சுமார் 1,460 பேரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு நீதிச்சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் M.J.W. தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.




இதன்பிரகாரம் கைதிகளை விடுதலை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் நாட்டிற்குள் பரவியுள்ள நிலையில், சிறைச்சாலைகளுக்குள் நிலவும் நெருக்கடியை குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் சிறைச்சாலைகளில், பிணை வழங்கக்கூடிய கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.




## ப்ரியா பவானி ஷங்கர் திரைப்பயணத்தின் முதல் சறுக்கல்



ப்ரியா பவானி ஷங்கர் தமிழ் சினிமாவில் வேகமாக வளர்ந்து வரும் நடிகை. இன்னும் சில தினங்களில் இவர் நயன்தாரா, த்ரிஷா போல் முன்னணி நடிகையாக வந்தாலும் ஆச்சரியமில்லை.

அந்த வகையில் ப்ரியா ஆரம்பத்தில் செய்தி தொகுப்பாளராக தான் தன் கெரியரை தொடங்கினார், அதிலிருந்து சின்னத்திரை வந்தார், இதில் இவர் நடித்த சீரியல் செம்ம ஹிட் அடித்தது.

தொகுப்பாளராகவும் சில ஷோக்கள் தொகுத்து வழங்கி வர, மேயாத மான் படத்தின் மூலம் சினிமாவில் எண்ட்ரீ கொடுத்தார் ப்ரியா.

இதை தொடர்ந்து கடைக்குட்டி சிங்கம், மான்ஸ்டர் ஆகிய படங்களில் நடித்தார், இந்த மூன்று படங்களுமே ஹிட் அடித்தது.

பிறகு சமீபத்தில் வந்த மா.ஃபியா படத்திலும் இவர் நடித்திருந்தார், இப்படத்தில் இவர் பொலீஸ் அதிகாரியாக நடித்தார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இப்படம் தோல்வியை தழுவ, ப்ரியாவின் முதல் தோல்வி படம் சினிமாவில் இது தான், இவை ரசிகர்களுக்கு கொஞ்சம் வருத்தம் தான். ப்ரியா கையில் தற்போது பொம்மை, குருதி ஆட்டம், இந்தியன் 2 என நம்பிக்கை தரும் படங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## விஜய்யின் அடுத்தப்படத்தின் சம்பளம், தென்னிந்தியாவே அதிரும் செய்தி!



விஜய் தமிழ் சினிமாவின் உச்சத்தில் இருக்கும் நடிகர். இவர் நடிப்பில் கடைசியாக வந்த மெர்சல், சர்கார், பிகில் ஆகிய படங்கள் பிரமாண்ட வசூல் சாதனை செய்தது.

அதிலும் பிகில் படம் ரூ300 கோடி வசூலை கடந்து சாதனை படைத்தது. இந்நிலையில் விஜய் அடுத்து மாஸ்டர் படத்தில் நடித்து வருகின்றார். இப்படத்திற்காக தான் ரூ 80 கோடி சம்பளமாக பெற்றதாக வருமான வரித்துறையினரிடம் விஜய்யே அறிவித்தார்.

இதை தொடர்ந்து தன் அடுத்த படத்திற்கு விஜய் எப்படியும் ரூ 100 கோடி வரை சம்பளமாக பெறுவார் என பிரபல பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தி ஒட்டுமொத்த தென்னிந்திய சினிமா ரசிகர்களையும் ஷாக் ஆக்கியுள்ளது. விஜய் தற்போது தன் திரைப்பயணத்தின் உச்சத்தில் இருக்கின்றார். கண்டிப்பாக ரஜினிக்கு நிகரான ஒரு இடத்தில் தான் விஜய் உள்ளார் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.






## வைரலாகும் கொரோனா புகைப்பட மீம்

நடிகை ஸ்ருதி ஹாசன் ஒரு காலகட்டத்தில் தமிழ் சினிமாவில் டாப் ஹீரோயினாக கலக்கியவர். நடிப்பையும் தாண்டி அவர் பாடல்கள் பாடுவதிலும் திறமை காட்டி வந்தார். ஹிந்தி, தெலுங்கு சினிமாவிலும் அவர் தன் திறமையை வெளிப்படுத்தினார். ஆனால் அவருக்கு பெரியளவில் பட வாய்ப்புகள் அமையவில்லை.

இந்நிலையில் அவர் வெளி நாடுகளில் மேடை கச்சேரிகளை செய்து வந்தார். தற்போது உலகம் முழுக்க கொரோனா வைரஸால் நோய் தொற்று என்னும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஆனால் கொரோனாவுக்கு நிரந்தர தீர்வாக மருந்துகள் இன்னும் ஆய்வு நிலையில் இருக்கின்றன. சினிமா பிரபலங்கள் பலரும் மக்களை கவனமாகவும் சுகாதாரமாகவும் இருக்கச்சொல்லி அறிவுறுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் கொரோனாவிலிருந்து மக்களை குணப்படுத்த போதி தர்மரை மீண்டும் அழைத்து வாருங்கள் என வேடிக்கையாக மீம் போட்டுள்ளனர். இதனை ஸ்ருதி ஹாசனும் பகிர்ந்துள்ளார். போதி தர்மராக சூர்யா 7 ம் அறிவு படத்தில் நடித்திருந்ததும், ஸ்ருதி மருத்துவ ஆராச்சியாளராக போதி தர்மர் மரபணுவை மீட்டு கொண்டுவந்ததும் நினைவிருக்கும் தானே.

## சூர்யாவிற்கு இந்த படம் கண்டிப்பாக மிகப்பெரிய திருப்பம் தான்



சூர்யா நடிப்பில் சூரரைப்போற்று படம் மிகப்பெரிய எதிர்பார்ப்பில் உள்ளது, இப்படத்தை காண ரசிகர்கள் ஆவலுடன் இருக்கின்றனர்.

நமக்கு கிடைத்த தகவல் படி சூரரைப்போற்று படம் மே மாதம் திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டுகின்றது.

ஏனெனில் சூரரைப்போற்று படம் ஏப்ரல் 10ம் திகதி திரைக்கு வருவதாக இருந்து தற்போது கொரோனா அச்சத்தால் தள்ளி சென்றுள்ளது.

இப்படம் கண்டிப்பாக சூர்யாவிற்கு பெரும் திருப்பமாக இருக்கும் என கூறப்படுகின்றது.

தொகுப்பு : – ஹாஷினி

# கருணாவின் பழிவாங்கலால் கொல்லப்பட்ட தளபதிகள்!! ஒரு முக்கியதாக்குதல் பற்றி இதுவரை வெளிவராத தகவல்!!

13.09.1987 அன்று மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்கள் மீது விடுதலைப் புலிகள் ஒரு அதிரடித் தாக்குதலை மேற்கொண்டிருந்தார்கள். அந்தத் தாக்குதலில் 'புளொட்' அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டார்கள். 'புளொட்' அமைப்பின் அரசியல் துறைச் பொறுப்பாளர் வாசுதேவா, இராணுவத்துறைச் செயலாளர் கண்ணன், மட்டக்களப்பு பொறுப்பாளர் சுபாஸ், ஆனந்தன் போன்றவர்கள் உட்பட இந்தியாவில் இருந்து அப்பொழுதுதான் இலங்கை திரும்பியிருந்த முக்கிய உறுப்பினர்கள் பலரும் கொல்லப்பட்டார்கள். புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அந்தத் தாக்குதலானது அந்தக் காலகட்டத்தில் மாத்திரமல்ல, தற்பொழுது கூட அதிகம் சிலாகிக்கப்படுகின்ற ஒரு தாக்குதல் என்றால் மிகையில்லை.

'பேச்சுவார்தைக்கு என்று அழைக்கப்பட்ட புளொட் முக்கியஸ்தர்கள் விடுதலைப் புலிகளால் நயவஞ்சகமாகப் படுகொலைசெய்யப்பட்டதாக' அந்தத் தாக்குதல்பற்றிய ஒரு பேச்சு தற்பொழுதும் இருந்து கொண்டிருக்கின்றது. புளொட் முக்கியஸ்தர்கள் மீதான தாக்குதல் இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோவினாலேயே உத்தரவிடப்பட்டு புலிகளால் மேற்கொள்ளப்பட்டதான ஒரு குற்றச்சாட்டும் அந்த நாட்களில் புளொட் அமைப்பினரால் வெளியிடப்பட்டிருந்தது. புளொட் முக்கியஸ்தர்களது நடமாட்டம் பற்றிய தகவல்கள் றோவினாலேயே புலிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் கூட ஒரு பேச்சு அந்த நேரத்தில் அடிபட்டது.

ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட வதந்திகள் பேச்சுக்கள் அனைத்தையும் கடந்து உண்மையில் என்ன நடந்தது என்கின்ற சரியான தகவல்கள் ஊடகங்களில் பெரிதாக வெளிவரவில்லை என்றுதான் கூறவேண்டும். புளொட் முக்கியஸ்தர்கள்மீதான விடுதலைப் புலிகளின் 'அந்தத் தாக்குதலின்" உண்மையான பின்னணி என்ன? உண்மையிலேயே என்ன நடந்தது? – இந்த விடயங்கள் பற்றித்தான் இந்த கட்டுரையில் நாம் விரிவாகப் பார்க்க இருக்கின்றோம்.

### கையறு நிலையில் 'புளொட்'


புலிகளைப் போலவே 'புளொட்' அமைப்பும் ஆரம்பம் முதலே இந்தியாவின் கைகளுக்குள் சிக்கவில்லை. இந்தியா வழங்கிய பயிற்சிகளைப் 'புளொட்' பெற்றிருந்தாலும், இந்தியாவின் கைக்கூலிகளாக அவர்கள் செயற்படத் தலைப்படவில்லை. அதனால் ஈழத்தில் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே 'புளொட்' அமைப்பு பலவழிகளிலும் இந்தியாவினால் ஓரங்கட்டப்பட்டே வந்தது. இந்தியப்படை இலங்கைக்கு வருவதற்கு சிறிது காலத்தின் முன்னர் 'புளொட்' அமைப்பு ஈழத்தில் தனது போராட்டத்தை விரைவுபடுத்துவதற்கு என்று வெளிநாடொன்றில் இருந்து கொள்வனவு செய்திருந்த பெரும் தொகை ஆயுதங்கள் தமிழ் நாட்டுக் கரையில் வந்திறங்கிய போது, இந்தியா அதனைக் கைப்பற்றியிருந்தது.

அதேபோன்று தமிழ் நாட்டில் பலவழிகளிலும் 'புளொட், அமைப்பிற்கு எதிராக தனது நடவடிக்கைகளை இந்தியா முடுக்கிவிட்டிருந்தது. அதே வேளை, அளவிற்கதிகமான போராளிகளை உள்வாங்கிவிட்ட நிலையில் அவர்களைப் போஷிக்க முடியாமல்தடுமாறிக்கொண்டிருந்த 'புளொட்' அமைப்பினுள் உள் முரண்பாடுகளும் தலைவிரித்தாட அரம்பித்திருந்தன. திறமையான பல போராளிகள்புளொட் அமைப்பினுள் காணப்பட்டிருந்த போதிலும், சரியான வழிநடத்தல்கள் இல்லாத காரணத்தால் புளொட் அமைப்பு சரியானமுறையில் இயங்கமுடியாத ஒரு அமைப்பாகவே மாறி இருந்தது. உட்படுகொலைகள், தலைமைத்துவ ஊழல்கள், கீழ்மட்டப் போராளிகளிடையேயான வறுமை, கந்தசாமி அணியினர் ஆடிய தாண்டவம் என்பன 'புளொட்' அமைப்பை பல வழிகளிலும் செயற்படமுடியாத ஒரு அமைப்பாக மாற்றியிருந்தது. கட்டுப்பாடிழந்த நிலையில் விரக்தியுடன் கூடிய பல போராளிகள் தமிழ் நாட்டில் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்திருந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் புளொட்டிலிருந்த ஒரு முக்கிய தளபதியான பரந்தன் ராஜன் என்பவர் இந்திய 'றோ' அமைப்பினால் உள்வாங்கப்பட்டு, முக்கிய போராளிகள் அடங்கிய ஒரு குழுவுடன் ஈ.என்.டி.எல்.எப்.(Eela National Democratic Liberation Front- ENDLF )என்ற அமைப்பை ஸ்தாபித்துச் சென்றுவிட, எஞ்சிய 'புளொட்' அமைப்பு செயற்பட முடியாத அளவு தனித்து நிற்கவேண்டி இருந்தது.

ஆரம்பம் முதலே புலிகளுக்கு எதிராக'புளொட்'மிகவும்தீவிரமாகச் செயற்பட்டுவந்த அமைப்பென்ற காரணத்தினால் புலிகளுடனும் கைகோர்த்துக்கொள்ள முடியாத நிலை புளொட்டிற்கு இருந்தது. அத்தோடு, விடுதலைப் புலிகள் அமைப்பு மீது ஜென்மப் பகை கொண்ட ஒரு அமைப்பாகவே 'புளொட்' அமைப்பும், அதன் தலைமையும் செயற்பட்டு வந்திருந்தது.

'புளொட்' அமைப்பின் இந்த கையெறு நிலையை ஸ்ரீரீலங்கா அரசு நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டது. இந்தியப் படையின் வருகையின் பின்னர் எதுவுமே செய்யமுடியாமல் தடுமாறிக்கொண்டிருந்த 'புளொட்' தலைமையை தொடர்பு கொண்ட ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி, 'புளொட்' அமைப்பிற்கு அபயம் அளிப்பதற்குத் தாம் விரும்புவதாக



தெரிவித்தார். அப்பொழுது ஈழமண்ணில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த புலிகள் மற்றும் இந்தியா– என்ற தமது இரண்டுஎதிரிகளையும்மீறிஎவ்வாறு அங்கு மீண்டும் கால்பதிப்பது என்று தடுமாறிக்கொண்டிருந்த 'புளொட்' அமைப்பின் தலைமைக்கு அத்துலத் முதலியின் அழைப்பு ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே இருந்தது.

ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பெயரில் 'புளொட்' அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் கொழும்பிற்கு வந்தார். ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் பல பேச்சுவார்த்தைகளைநடாத்தினார். இதனைத் தொடர்ந்து 'புளொட்' அமைப்பு கொழும்பிலும் தென் இலங்கையிலும் பல முகாம்களை அமைக்க ஆரம்பித்தது. பெருமளவு போராளிகள் அந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டார்கள். அந்த அமைப்பைச் சேர்ந்த பல முக்கிய உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா படை அதிகாரிகளுடன் இணைந்து செயற்படவும் ஆரம்பித்தார்கள்.

### ஸ்ரீலங்காவை திருப்திப்படுத்த புலிகள் மீது பாய்ச்சல்?

வவுனியாவிலும் பல 'புளொட்' முகாம்கள் அமைக்கப்பட்டன. அப்பொழுது வவுனியாவில் தங்கியிருந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ வவுனியாவில் 'புளொட்' அமைப்பு முகாம்களை அமைக்க உதவி புரிந்தார். மாணிக்கதாசன் தலைமையில் வவுனியாவில் புளொட் அமைப்பு காலூன்ற ஆரம்பித்தது.

இதேபோன்று மட்டக்களப்பிலும் 'புளொட்' அமைப்பின் அரசியல்துறைச் பொறுப்பாளர் வாசுதேவா மற்றும் பொறுப்பாளர் சுபாஸ், சிவராம் போன்றவர்கள் தலைமையில் அந்த அமைப்பு காலூன்ற ஆரம்பித்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு போராளிகள் 'புளொட்' அமைப்பில் இருந்ததால், அந்தப் போராளிகளின் பெற்றோர், உறவினர்களை சந்தித்து தமது அமைப்பிற்கு ஆதரவு தேடிக்கொள்ளும் எண்ணத்துடனும், தமது அமைப்பை மீளவும் கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் செயற்பட ஆரம்பித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே மன்னாரில் புலிகள் அமைப்பு மீது 'புளொட்' தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருந்தது. அந்தத் தாக்குதலில் கிம்மன், அர்ச்சுனா, ரஞ்சன் என்ற மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். புலிகள் மீது புளொட் உறுப்பினர்கள் காலாகாலமாக கொண்டிருந்த பகை உணர்வின் வெளிப்பாடாக அந்தத் தாக்குதல் இருந்தாலும், தமது புதிய எஜமானர்களாகிய ஸ்ரீலங்காப் படையினரைத் திருப்திப்படுத்துவதற்காகவே 'புளொட்' அந்தத் தாக்குதலை அப்பொழுது மேற்கொண்டிருந்ததாக மக்கள் பேசிக்கொண்டார்கள்.

### புலிகளின் பதிலடி:

தமது உறுப்பினர்கள் மீது 'புளொட்' அமைப்பு மேற்கொண்ட தாக்குதல்கள் பற்றி இந்தியப் படையினரிடம் தமது முறைப்பாட்டை தெரிவித்த புலிகள் சம்பந்தப்பட்வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுகோரினார்கள். இந்தியப்படை எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வராத காரணத்தினால் புலிகள் 'புளொட்டிற்கு பதிலடி கொடுக்க தயார் ஆனார்கள்.

மன்னாரில் 'புளொட்' அமைப்பு மீது புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 50 இற்கும் அதிகமான புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மட்டக்களப்பிலும் 'புளொட்' அமைப்பிற்கு எதிராக தாக்குதல்களை நடாத்தவேண்டும் என்ற முடிவை புலிகள் எடுத்திருந்தார்கள்.

அதிலும் புளொட் அமைப்பின் ஒரு குறிப்பிட்ட முக்கியஸ்தரைக் குறிவைத்து தாக்குதலை மேற்கொள்ளவேண்டும் என்று மட்டக்களப்பில் உள்ள புலிகள் தீர்மானம் எடுத்தார்கள். அந்த குறிப்பிட்ட புளொட் முக்கியஸ்தரைக் குறிவைத்து அவர்கள் தேடித்திரியவும் ஆரம்பித்தார்கள்.

**வேட்டை புலி**

# 22 பாராளுமன்ற உறுப்பினர்களை மீளவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கொண்டிருப்பது அத்திய அவசியம்– இல்லையேல் ஆபத்து

கடந்தவார தொடர்ச்சி...

இதற்கான சட்டம் 2011 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே நாங்கள் எதிர்வரும் பத்திரிகைகளில் அதனை பிரசுரிப்பதில் கடினமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். இருந்த போதும் இந்த போராட்டத்தினுடைய மறு வடிவம் தான் இந்த அரசியல் கட்டமைப்பு. மாகாண சபை கூட ஒரு ஆயுத கட்சிகளுக்காக கொண்டுவரப்பட்டது தான். ஆகவே இந்த மாகாண சபையில் ஆயுத கட்சிகள் சார்ந்தவர்கள் பெற்றுக்கொள்வது அல்ல. விடுதலைப்புலிகளிலும் இன்று பல்வேறு பிரிவுகள் முளைத்து விட்டார்கள் அதற்கு உத்தியோகபூர்வமாக வெளிநாடுகளில் இருக்கின்ற அல்லது உருத்திரகுமார் நெடியவன் போன்றவர்கள் இவர்களுடைய உத்தியோகபூர்வமான அறிக்கை வெளிப்படவில்லை. இவர்கள் அனைவரும் ஒட்டுக்குழுக்கள் என்று தான் அவர்கள் கூறுகின்றார்கள். ஆகவே தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரை அவர்கள் தீயாறு என்ற அமைப்பினூடாக வடக்கு கிழக்குகளிலே ஒரே நேரத்தில் அனைத்து இடத்திலும் அவர்களுடைய காரியாலயங்களை திறந்து வடகிழக்கிலே இருக்கக்கூடிய மக்களை கண்காணித்து அல்லது அவர்களை ஒரு தொழில் ரீதியாக உணர்வுபூர்வமாக அவர்களை வழிநடத்திச்செல்லும் அனைத்து கட்டமைப்புக்களும் அந்த அணிகளிடம் இருந்தது.

அவர்களை டயஸ்போரா என்று கூறுவார்கள். அது ஒரு புறம் இருக்க எங்களை பொறுத்தவரையிலே வடகிழக்கிலே தமிழ் பேசும் மக்கள் கொழும்பிலும் மலையகத்திலும் எங்கு இருந்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் நாம் ஒரு குடையின் கீழ் செயற்பட வேண்டும். ஏனென்றால் அது தான் தற்பொழுது பிரபல்யமான ஒரு முன்னேற்றகரமான கட்சியாக இருக்கின்றது. அல்லது ஓடுகின்ற குதிரைக்குத் தான் நாங்கள் பந்தையம் கட்ட வேண்டும் சரிபிழைக்கு அப்பால். ஓடுகின்ற குதிரைக்கு பந்தையம் கட்டி அங்கே எங்களுடைய சரிபிழைகளை சுட்டிக்காட்டி கதைக்க முடியும். சுமந்திரன் பிழை விடுகின்றார் அல்லது மாவை சேனாதிராஜா பிழை விடுகின்றார் சம்பந்தன் பிழை விடுகின்றார் என்றல்ல நாம் பிழை விடுகின்றோமா என்று தான் பார்க்க வேண்டும். இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பை அவர்கள் பிழை விடுகின்றார்கள் என்று விளம்பரப்படுத்துவதன் ஊடாக அவர்கள் வளர்ந்த விடுகின்றார்கள். ஏனைய கட்சிகள் தாண்டு போகின்றார்கள். எனவே அவர்களும் தமிழ் மக்கள் தமிழ் பேசும் மக்கள் சரிபிழைக்கு அப்பால் டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்தவரையிலே அவர் அன்று கூறியதைப் போல் இன்றும் தனது கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்றார்.

அவர் கொலை கற்பழிப்பு கப்பம் வாங்கியிருக்கின்றார் என்று அவர் மீது குற்றச்சாட்டுக்கள் பல இருக்கின்றது. வன்முறைகளில் ஈடுபட்டார் அல்லது உதயன் பத்திரிகையின் தாக்குதலின் சூத்திரதாரியின் பின் இருக்கின்றார் என்றெல்லாம் கூறப்படுகின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் கூட அவர் தனக்கானவொரு ஆசனத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றார். அது போன்று ஏனைய கட்சிகள் ஆனந்த சங்கரியினுடைய கட்சியாக இருக்கட்டும் பொன்னம்பலத்தினுடைய கட்சியாக இருக்கட்டும் அல்லது கருணாம்மான், பிள்ளையான் போன்ற இவ்வாறான பல தமிழ் கட்சிகளாக இருக்கட்டும் 20 க்கு மேற்பட்ட கட்சிகள் தற்பொழுது புதிதாக முளைத்திருக்கின்றது. இந்த கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பைபலப்படுத்தவேண்டும்அல்லது இழந்து போன அந்த 7 ஆசனத்தையும் மீளப் பெறுகின்றவர்களாக நீங்கள் பரிணாமவளர்ச்சியடைந்திருக்க வேண்டும். மக்கள் மத்தியிலே ஒருவரைக்குறைகூறி ஆட்சியமைப்பதல்ல. நீங்கள் செய்கின்றீர்கள் என்று ஒவ்வொரு நடவடிக்கைகளையும் பார்த்து விட்டு மக்கள் உங்களை பின்தொடர்ந்து வருபவர்களாகவே இந்த நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

உண்மையிலே சிங்கள இனவாதம் தமிழ் இனவாதத்தை தொடர்ந்தும் இந்த மண்ணில் விதைக்கத்தான் போகின்றார்கள். ஏனென்றால் 70 அல்லது 60 சதவீதம் இருக்கின்ற அவர்கள் நிச்சயமாக அந்த மதவாதத்தையும் இனவாதத்தையும் விதைப்பதன் ஊடாகத்தான் அவர்களின் வெற்றிகூட உறுதி செய்யப்படும். ஆகவே எம்மைப் பொறுத்தவரை இதனை மதவாதமும் தற்பொழுது இந்த வடக்குகிழக்கு பகுதிகளில் தமிழர் தாயகத்திலே தலைதூக்கி இருக்கிறது. இந்த மதவாதத்தையும் எதிர்க்க வேண்டிய சூழல் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்றது. இந்துக்கள் கிறிஸ்தவர்கள் என்று மதவாதத்தை தூண்டி அதிலே குளிர்காய்ந்து வரப்பார்க்கின்றார்கள் பலர். தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த நாட்டிலே போரிடுகின்ற பொழுது உண்மையிலே அவற்றையெல்லாம் அவர்கள் பார்க்கவில்லை. அதாவது மதவாதத்தை கடந்து தமிழ் மொழியால் ஒன்றுபட்டுத்தான் இந்த போராட்டம் நடத்தப்பட்டது. மீளவும் ஒரு போராட்டத்தை ஊக்குவிப்பதற்கான அல்லது செயற்படுத்துவதற்கான நிலைப்பாடு எங்களுடைய நிலைப்பாடல்ல ஊடகத்துறையை பொறுத்தவரையிலே தமிழ் மக்களுடைய ஒற்றுமையை நாங்கள் இந்த 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே நிச்சயமாக வலியுறுத்தி நிற்கின்றோம். நீங்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட வேண்டும். சிங்கள மக்கள் தங்களுடைய விடுதலைக்காக அல்லது ஒட்டுமொத்தமாக போராட்டங்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதில் எவ்வாறு மும்முரமாக ஒட்டுமொத்தமாக செயற்பட்டார்கள். அது போன்று தமிழ் மக்களாகிய நாம் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய கரங்களை பலப்படுத்துவதோ அல்லது தமிழ் மக்களுக்கான ஒரு மாற்றுக் கட்சி இருக்கின்ற பொழுது அவர்கள் வெல்வார்களா என்று பார்த்துவிட்டால் அவர்களுக்கு நாட்டிலே ஜனநாயகம் இருக்கின்ற வகையிலே தமிழ் சிங்கள சகோதர மொழியாக இருக்கின்ற கட்சிகளிற்கும் அவர்கள் ஆதரவு அளிப்பார்கள்.

முஸ்லிம்களுக்கும் ஆதரவளிப்பார்கள். நீங்கள் எதற்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம். ஆனால் தன்மானம் கொண்ட ஒரு தமிழன் அல்லது தேசியம் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்று கேட்கின்ற ஒரு தமிழன் பல்லாயிரக்கணக்கானமக்கள்இந்தநாட்டிலே கொத்து கொத்தாக கொலை செய்யப்பட்டதை கண்ணால் பார்த்த மக்கள் இனப்படுகொலை இடம்பெற்றதாக 244 க்கு மேற்பட்ட இனப்படுகொலைகள் நடத்தப்பட்டதாக இந்த நாட்டில் பதிவாகியிருக்கின்றது. தமிழ் மக்களுடைய ஆசியாவிலே தலைசிறந்த நூலகத்தை எரித்த இவர்களுக்கு அல்லது தொடர்ந்தும் 30 ஆண்டு கால யுத்தத்தில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். கொலை செய்யப்பட்ட இவர்களுக்கும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் அல்லது இன்று பயங்கரவாத சட்டத்திலும் தொடர்ந்தும் நிலைநாட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அது தமிழ் மக்கள் மீது அல்லது விடுதலைப்புலிகள் மீது போடப்பட்டதாகவே இந்த தடைச்சட்டத்தை போட்டிருக்கின்றார்கள்.

ஆகவே இப்படிப்பட்டவர்கள் இவர்களோடு சார்ந்து செயற்படுகின்ற சில தமிழ் ஒட்டுக்குழுக்களுக்கு நீங்கள் ஆதரவளித்து இதில் என்ன பிரயோசனத்தைக் காணப்போகின்றீர்கள் என்பது எமது ஊடகத்தினுடையஇன்றையகேள்வியாகவும் இருக்கின்றது?

இரணியன்


## கொரோ வைரஸிலிருந்து எப்படி தற்காத்துக்கொள்வது



அடிக்கடி கைகளை கழுவவும்


தும்மலின் போது Tissue பேப்பரை மட்டும் பயன்படுத்தவும்


பயன்படுத்திய Tissue பேப்பர்களை முறையாக அப்புறப்படுத்தி விட்டு கைகளை கழுவவும்


Tissue பேப்பர் இல்லை என்றால் சட்டை Sleeveஐ பயன்படுத்தவும்


கையை மூக்கு, கண் மற்றும் வாய் பகுதி அருகே எடுத்து செல்வதை தவிர்க்கவும்


உடல் நிலை சரி இல்லாத நபர்கள் அருகே நெருக்கமாக செல்வதை தவிர்க்கவும்

### கொரோனா பாதுகாப்பு முறை

கைகளை சவர்க்காரமிட்டு அடிக்கடி கழுவுங்கள்

கண்,வாய்,மூக்கு மற்றும் முகத்தை தொடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்

# உலகில் பலம்வாய்ந்த இயக்கமாக 1990–2009 வரை விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர் – ஐ.நா. அறிக்கை

**கடந்தவார தொடர்ச்சி...**



16. குழுவின் செயல் திட்டம் இரு கட்டங்களாக நெறிப்படுத்தப்பட்டது. முதற் கட்டத்தில், அதன் ஆய்வுரிமை வரம்பு தொடர்பான நிபுணத்துவம் அல்லது அனுபவம் உள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து இலங்கையின் ஆயுதந் தாங்கிய மோதல் பற்றிய பல்வேறு தகவல்களை குழு சேகரித்தது. இவ்வாறான சில தகவல்கள் எழுத்து வடிவத்தால் உ-ம்:- அரசாங்கம், ஐ.நா. அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களின் அறிக்கைகள் மற்றும் குழுவுக்கு இரகசியமான முறையில் வழங்கப்பட்ட தகவல்கள் மூலமாகக் கிடைத்தன. ஏனைய தகவல்கள் குழுவின் பல கூட்டங்கள் மற்றும் அதன் செயலகத்தின் மூலமும் பெறப்பட்டன. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது நடந்தேறிய நிகழ்வுகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஐ.நா. மற்றும் சர்வதேச அமைப்புக்களின் அலுவலர்கள் அத்துடன் அரசாங்கங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருடன் குழு சந்திப்புக்களை நடத்தியது. அதன் நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தின் போது, குழு இவ்வறிக்கையின் நகலைத் தயாரித்தது. பிரசுரிப்பதற்கு ஏதுவான வகையில் இவ்வறிக்கை வரையப்பட்டது.

17. பரவலாக பொதுமக்களின் தொடர்பு கொள்வது தொடர்பில், அக்கறைகொண்ட அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் எழுத்து மூலமாக முறையீடுகளைச் சமர்ப்பிக்குமாறு பொதுவானதொரு அழைப்பு விடுக்கப்பட்டது. 2010 ஒக்டோபர் 21ஆம் திகதி, குழுவின் பணியாட்தொகுதித் தலைவர், அறிவித்தலின் பிரதியொன்றை இணைத்து அது ஐ.நா. இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்று அறிவித்து இத்தீர்மானம் பற்றி இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதிக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆங்கில அறிவித்தல் 2010 ஒக்டோபர் 27 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டதோடு, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான அறிவித்தல்கள் பின்னர் பிரசுரிக்கப்பட்டன. கருத்துக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆரம்பத்தில் கடைசித் திகதியாகக் குறிப்பிடப்பட்ட 2010 டிசம்பர் 15ஆம் திகதி பின்னர் 2010 டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. 2010 டிசம்பர் 31ஆம் திகதி இருந்தவாறாக, 2,300க்கும் மேற்பட்டவர்களிடம் இருந்து 4,000க்கும் அதிகமான முறையீடுகள் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றன.

(08) 18. குறிப்பிட்டதொரு வகைகளிலான மீறல்கள் அல்லது இறுதிக் கட்டங்களின் போதான குறிப்பிட்டதொரு காலப்பகுதிகள் தொடர்பானதாக மற்றும் மனித உரிமைகள் அல்லது மனிதாபிமான சட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறையீடுகளில் கணிசமானவை இருந்தன. ஆவணப்படுத்தப்பட்ட தகவல், நிகழ்வுகளின் பட்டியல்கள் அல்லது பாதிக்கப்பட்டோர், நிழற்படங்கள் மற்றும் வீடியோப் படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கின. பாரபட்சமற்றவையாக பகுப்பாய்வு ரீதியிலான மட்டுப்படுத்தப்பட்ட சில முறையீடுகள் பொதுவான தகவல்கள், போக்குகள் அல்லது நிலைமை பற்றிய குறிப்பின் அம்சங்களின் பகுப்பாய்வினை வழங்கின. பொதுவான தகவல்கள் ஊடக அறிக்கைகள், இணையத் தொடர்புகள் பொதுவாகக் கிடைக்கக் கூடிய மூலங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் வரலாற்று ரீதியிலான விளக்கங்கள் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகளில் அடங்கின. இறுதியாக, உண்மையினை அடிப்படையாக அல்லது பகுப்பாய்வினைக் கொண்டிராத நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பான பரிந்துரைகளைச் செய்யுமாறும் குழுவினை வேண்டிக்கொண்டவை பெறப்பட்ட கணிசமான முறையீடுகளில் அடங்கின.

19. முறையீடுகளை ஒவ்வொன்றாக குழுவினால் சரி பிழை பார்க்க முடியவில்லை என்பதால் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தன்மையினை நிறைவு செய்யவும் குழுவின் நியதிக்கேற்ப அவை நேரடி மூலமாகப் பாவிக்கப்படவில்லை (அத்தியாயம் டிடி அ பார்க்கவும்). சில விடயங்களில், முறையீடுகள் தகவலின் ஏனைய மூலங்களை உறுதிப்படுத்துவதற்கு உதவின. யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாக மாத்திரமன்றி மேலும் விரிவாக கடந்த காலம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசரத் தேவையை குழுவின் காலம் சார்ந்த ஆணைக்கு முன்பதான நிகழ்வுகளை உள்ளிட்டதாகக் கிடைக்கப்பெற்ற கணிசமான முறையீடுகள் வலியுறுத்திக் காட்டுகின்றன.

ஈ. இலங்கை அரசாங்கத்துடனான இணைச் செயற்பாடு

20. அதன் ஆரம்பந்தொட்டு, அதன் ஆணையை அமுல் செய்வது பற்றி இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி பொறுப்புக்கூறும் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கத்தின் நோக்கம் எவ்வாறாக உள்ளது என்பதை அறிவதற்காகக் குழு விருப்பம் கொண்டிருந்தது. உண்மையிலேயே, குழு அரசாங்கத்துக்கான தொரு மூலவளமாகச் செயற்படலாம் என்பதாக குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் செயலாளர் நாயகம் தன் நம்பிக்கையைத் தெரிவித்திருந்தார். குறிப்பாக, உள்நாட்டிலேயே அபிவிருத்தி செய்யப்பட்ட பொறுப்புக்கூறல் பற்றியதொரு பொறித்தொகுதி என பகிரங்கமாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ள கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக் குழுவுடன் தொடர்புகளைப் பேணுவது பெறுமதி மிக்கதாகும் என்ற நிலைப்பாட்டினை தொடர்ச்சியுமாகக் குழு பேணி வந்துள்ளது. அதேநேரத்தில், பொறுப்புக் கூறலைப் பொறுத்தவரையில் ஏனைய உள்நாட்டு நிறுவனங்களுக்கும் பாரியதொரு பங்களிப்பு உண்டு என குழு கருதியதோடு, அரசாங்கத்தினூடாக அவற்றுடனும் தொடர்புகளைப் பேண குழு முயற்சிகளை மேற்கொண்டது.

(09) 21. இவ்விளக்கம் எடுத்துக் காட்டுவது போன்று, 2010 செப்டெம்பர் ஆரம்பத்தில் இருந்து குழு அதன் ஆணையை நிறைவு செய்யும் சந்தர்ப்பம் நெருங்கும் வரை, இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாட சொல் மூலமும் எழுத்து மூலமும் பலதடவைகள் குழு முயற்சியினை மேற்கொண்டது. குழுவின் நோக்கெல்லை செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதாக உள்ளதாகவும் ஏதும் புலனாய்வினை மேற்கொள்வதில் அது ஈடுபடவில்லை என்பதை உள்ளிட்டவாறு இலங்கை அரசாங்கத்துக்கும் ஐ.நா. அலுவலர்களும் பலதடவை தெளிவுபடுத்தியுள்ளனர். குழுவுடன் எதுவிதத் தொடர்பாடலும் இன்றிப் பல மாதங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வருமாறு அரசாங்கம் குழுவுக்கு அழைப்பு விடுத்த போதிலும் அத்தகைய விஜயத்துக்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடாமல் அதன் நிலைப்பாட்டை முழுமையாக மாற்றிக் கொண்டது.

குழு கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவுக்கு "பிரதிநிதித்துவங்களை" மாத்திரம் செய்யலாம் என 2010 டிசம்பர் மாதம் கடித மூலம் அரசாங்கம் வற்புறுத்திய போதிலும் நாட்டுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கான அதன் விருப்பத்தைக் குழு வலியுறுத்தியது. இதனையும் 2011 ஜனவரி ஆரம்பத்தில் வழங்கிய குறிப்பொன்றின் மூலம் அரசாங்கம் நிராகரித்ததோடு அதன் பின்னர் விஜயம் பற்றி மேற்கொண்டு எதுவித தொடர்பினையும் பேணவில்லை. மாறாக, கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாடு பற்றிய ஆணைக்குழு மற்றும் ஏனைய உள்நாட்டுப் பொறித்தொகுதிகள் பற்றிய குழுவின் கேள்விகளுக்கு எழுத்து மூலமான பதிலை ஜனவரி இறுதி அளவில் அனுப்பி வைத்ததோடு கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக் குழுவின் எந்தவொரு உறுப்பினரையும் உள்ளடக்காத சிறியதொரு தூதுக்குழுவினை நியூயோர்க்குக்கு அது அனுப்பி வைத்தது.

22. இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு அத்துடன் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டுள்ள பலதரப்பட்ட அதிகாரிகளைக் குழு சந்திப்பதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என்பதையிட்டு குழு கவலை தெரிவிக்கிறது.

இலங்கைக்கு விஜயம் செய்வது அதன் நடவடிக்கைகளுக்கு அவசியமானதல்ல என்றிருந்த போதிலும், கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு மற்றும் அரசாங்க அலுவலர்களைச் சந்தித்து, அவர்களின் கருத்துக்களை மேலும் நேரடியாகக் கேட்டு அவர்களுடன் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு (வேறு வழிகளில் உத்தியோகபூர்வ கருத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குழுவுக்கு முடிந்த போதிலும்) குழுவுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கும். எழுத்து மூலமான பதில்களையும் இலங்கை அதிகாரிகளுடனான நேருக்கு நேரான உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை குழு வரவேற்ற போதிலும், அப்படியானதொரு ஈடுபாட்டிற்காக குழு முயற்சி செய்யவில்லை.

குழுவினது பதிவுகளின் இரகசியத் தன்மை

23. பின்னர் தகவலைப் பிரயோகிப்பது பற்றிய முழுமையான இரகசியத் தன்மையின் உறுதிப்பாட்டின் பேரில் சில சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமான மற்றும் வாய் மூலமான சமர்ப்பணங்கள் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றன. இது பற்றி அறிவுரை வழங்கிய சட்ட விவகாரங்கள் அலுவலகம், செயலாளர் நாயகத்தின் "தகவலின் பதிவு நுட்பத்தன்மை, வகைப்படுத்தல் மற்றும் கையாளுதல்' தொடர்பான அறிக்கையின் (F$/FvM/2007/6) ஏற்பாடுகளை அதன் பதிவுகளுக்கு உரியதாய்க் கருதலாம் என உறுதிப்படுத்தியது.

தொடரும்...

சுழியோடி



# அறிவியல் உலகம்

## கூகுளில் Corona virus என தேடினால் என்ன நடக்கும் தெரியுமா?

தற்போது உலகெங்கிலும் உள்ள மக்கள் கூகுளில் கொரோனா வைரஸ் தொடர்பிலான தகவல்களை அதிகம் தேடிப்பெற்றுக்கொள்கின்றனர்.

அதுமாத்திரமன்றி இணைய நிறுவனங்களுக்கும் கொரோனா தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய மற்றும் தகவல்களை மக்களுக்கு வழங்கவேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

இதனையடுத்து கூகுளில் Coronavirus அல்லது COVID - 19 என தேடினால் அதற்கான தகவல்களைக் காட்டக்கூடிய புதிய பகுதி ஒன்றினை கூகுள் அறிமுகம் செய்துள்ளது.

அதாவது தேடலுக்கானபெறுபேறுகள் காண்பிக்கப்படும்பகுதிக்குவலதுபக்கமாக தனியான பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அப்பிரிவில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்றாற்போல் கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை காண்பிக்கக்கூடிய வகையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி கொரோனா அறிகுறிகள், தடுப்பு முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள் என்பவற்றிற்கான டேப்பும் (Tab) தரப்பட்டுள்ளது.



## வாடிக்கையாளர்களுக்கு 15GB டேட்டாவினை மேலதிகமாக வழங்கும் பிரபல நிறுவனம்

தற்போது உலக அளவில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இது தொடர்பான தகவல்களை இணையத்தளம் ஊடாகவே அதிகளவான மக்கள் அறிந்துவருகின்றனர்.

அதுமாத்திரமன்றி அநேகமான நாடுகளில் மக்கள் வீட்டிலே தங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




இவற்றினைக் கருத்தில்கொண்டு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் பல்வேறு சலுகைகளை மக்களுக்கு வழங்கிவருகின்றன.

இதேபோன்று Verizon Wireless நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு 15GB டேட்டாவினை மேலதிகமாக வழங்க முன்வந்துள்ளது.

அதுமாத்திரமன்றி குறைந்த வருமானமுடையவர்களுக்கும் குரல்வழி அழைப்புக்களுக்கான சில சலுகைகளை குறித்த நிறுவனம் வழங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தனது பயனர்களுக்காக வட்ஸ் அப் வழங்கவுள்ள தகவல்கள்




உலகளவில் வட்ஸ் அப் செயலியினை ஏறத்தாழ 2 பில்லியன் வரையானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களுக்கு தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நெருக்கடி தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு தயாராகவுள்ளது.

இதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளது.

ஏற்கனவே பேஸ்புக், டுவிட்டர், கூகுள் போன்ற முன்னணி நிறுவனங்கள் இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றன.

இந்த வரிசையில் வட்ஸ் அப் செயலியும் இணைந்துள்ளது.

இதன்படி கொரோனா தொடர்பான தவறான தகவல்கள் பரப்பப்படுவது தொடர்பில் கண்காணித்து அவற்றினை நீக்குவதுடன், மக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையிலான உண்மைத் தகவல்களை கொண்டு சென்று சேர்க்கவுள்ளது.

இவ் வசதியினைப் பெறுவதற்கு மொபைலில் வட்ஸ் அப்பினை திறந்து https://api.whatsapp.com/send?phone=41225017596&text=hi&source=&data=" target="_blank">https://api.whatsapp.com/send?phone=41225017596&text=hi&source=&data= எனும் இணைப்பில் சென்று இணைய வேண்டும்.

அல்லது 41794752209 எனும் தொலைபேசி இலக்கத்தினை மொபைல் சாதனத்தில் சேமித்து சட் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

## தற்போதைய சூழ்நிலையில் இன்ஸ்டகிராம் எடுத்துள்ள அதிரடி நடவடிக்கை

இன்ஸ்டகிராம் சேவையினை உலகில் பல மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதன் ஊடாக கொரோனா வைரஸ் தொடர்பான வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.




இந்நிலையில் கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை நீக்குவதற்கு இன்ஸ்டகிராம் தீர்மானித்துள்ளது. பேஸ்புக் நிறுவனம் ஏற்கனவே இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

எனினும் பேஸ்புக் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் இன்ஸ்டகிராம் தற்போதுதான் குறித்த பதிவுகளை நீக்க ஆரம்பித்துள்ளது. இதேவேளை டுவிட்டர் போன்ற ஏனைய சமூகவலைத்தள நிறுவனங்களும் ஏற்கனவே கொரோனா வைரஸ் தொடர்பான வதந்திகளை நீக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



**எங்களுக்கென்று சில பழக்கவழக்கங்கள் உண்டு,**
**அதைக் கொண்டு எங்களை பற்றி மதிப்பிடுபவர்களை பற்றி**
**எங்களுக்கு கவலையில்லை, நாங்கள் இப்படி தான் இருப்போம்.**

**பிடல் காஸ்ட்ரோ**

# விளையாட்டு செய்திகள்

## அச்சுறுத்தும் கொரோனா – ஐ.பி.எல் தொடர் முற்றாக இரத்தாகின்றது!

இந்தியாவில் கொரோனா வைரஸ் மிகவும் வேகமாக பரவி வருவதால் இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டி இரத்து செய்யப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது. உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் காரணமாக உலகளாவிய ரீதியில் ஒலிம்பிக் உட்பட பல பிரபல்யமான போட்டித் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் மிகப்பெரும் கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். போட்டிகளின் 13 ஆவது பருவக் காலப் போட்டிகள் மார்ச் 29 ஆம் திகதி முதல் மே மாதம் 23 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. கொரோனா வைரஸ் காரணமாக இந்த போட்டி ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் மிகவும் வேகமாக பரவி வருவதால் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு 21 நாட்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி வரை இது அமுலில் இருக்கும். இதனால் ஐ.பி.எல். போட்டியை நடத்துவதில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டி நடைபெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் நடப்பு ஆண்டுக்கான தொடரை ரத்து செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதே நேரத்தில் கிரிக்கெட் சபை இந்த விடயத்தில் எந்த முடிவும் எடுக்கவில்லை. ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு பிறகு இதுகுறித்த முடிவை எடுக்கும் எனத்தெரிகிறது. ஐ.பி.எல். போட்டி ரத்தானால் பி.சி.சி.ஐ.க்கு கோடிக்கணக்கில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.




## கொரோனா வைரஸ் பாதிப்புக்கு 50 லட்சம் ரூபாய் நிதி வழங்கிய சச்சின்



கொரோனாவால் பாதிப்பு அடைந்தோருக்கு உதவும் வகையில் பிரதமரின் தேசிய நிவாரண நிதி, மகாராஷ்ரா முதல்வரின் நிவாரண நிதிக்கு தலா 25 லட்சம் ரூபாயை சச்சின் டெண்டுல்கர் வழங்கியுள்ளார். சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவிலும் கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் நாடு முழுவதும் 21 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிரதமரின் தேசிய நிவாரண நிதி மற்றும் மாநில முதல்வரின் நிவாரண நிதிக்கு பல்வேறு முக்கிய பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள் நிதியுதவி வழங்கி வருகின்றனர். இந்நிலையில், இந்திய கிரிக்கெட் ஜாம்பவானான சச்சின் டெண்டுல்கர், கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தோருக்கு உதவும் வகையில் பிரதமரின் தேசிய நிவாரண நிதி மற்றும் மகாராஷ்ரா முதல்வரின் நிவாரண நிதிக்கு தலா 25 லட்சம் ரூபாய் என மொத்தம் 50 லட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்.

## கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெடரர், ரொனால்டோ, மெஸ்ஸி நிதியுதவி!




சுவிஸில் கொரோனா அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கொடை வழங்கவுள்ளதாக பிரபல டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் அறிவித்துள்ளார். கொரோனா வைரசுக்கு எதிரான போராட்டத்தில் தங்களின் பங்களிப்பு ஆரம்பித்துள்ளதாக தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ள பெடரர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ பொதுமக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோன்று பிரபல கால்ப்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ போர்துக்கேய மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் கருவிகளை நன்கொடையாக வழங்கியுள்ளார். அர்ஜென்டினா கால்பந்தாட்ட வீரர் லியோனல் மெஸ்ஸியும் ஒரு தொகை நிதியுதவி வழங்கியுள்ளார்.

## கொரோனா காரணமாக மகளைப் பிரிந்த பங்களாதேஷ் வீரர்



கொரோனா நோய்த் தொற்றில் இருந்து பாதுகாக்க தனிமைப்படுத்தலில் உள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் ஷகிப் அல் ஹசன், தனது மகளை பார்க்க முடியாமல் தவிப்பது வேதனை அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், சகலதுறை வீரருமான ஷகிப் அல்-ஹசன் ஊழல் தடுப்பு விதிமுறையை மீறியதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் விதித்த ஒரு ஆண்டு தடையை அனுபவித்து வருகிறார்.

அவருடைய மனைவி உம்மி அகமது சிஷிர், மகள் அலைனா ஹசன் ஆகியோர் அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள். அவர்களை சந்திக்க ஷகிப் அல் ஹசன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில் கொரோனா நோயின் தாக்கம் வேகமாக பரவி வருவதால் அங்கு சென்றும் தனது குடும்பத்தினரை நேரில் சந்திக்க முடியாமல் இக்கட்டான நிலைக்கு ஷகிப் அல் ஹசன் தள்ளப்பட்டுள்ளார். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமெரிக்காவில் உள்ள ஹொட்டலில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் அவர் தனது பேஸ்புக்கில் உருக்கமான காணொளிப் பதிவை வெளியிட்டுள்ளார்.

அதில், 'சில நாட்களுக்கு முன்பு நான் அமெரிக்காவை சென்றடைந்தேன். கொரோனா அச்சுறுத்தலால் பயணத்தின் போது சற்று பயமாகத்தான் இருந்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், நல்ல சத்தான உணவும் எடுத்துக்கொண்டேன். அமெரிக்கா சென்றடைந்ததும் நான் நேராக ஹொட்டலுக்கு சென்று விட்டேன். அங்கு 14 நாட்கள் தனிமையில் தங்கி இருக்க போவதாக எனது மனைவி மற்றும் மகளிடம் தெரிவித்து விட்டேன். நான் பங்களாதேஷில் இருந்து விமானத்தில் கிளம்பியதும் என்னால் யாருக்கும் வைரஸ் தொற்றி விடக்கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடன் தனிமைப்படுத்தலுக்காக நேராக ஹொட்டலுக்கு சென்று விட்டேன். நான் இங்கு வந்த பிறகும் இன்னும் எனது மகளை பார்க்கவில்லை. அது எனக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. இந்த தருணத்தில் இந்த தியாகம் மிகவும் முக்கியமானதாகும் என்று நினைக்கிறேன். வெளிநாடுகளில் தங்கி இருப்பவர்கள் வீட்டை விட்டு வெளியில் வராமல் இருப்பது முக்கியமானதாகும். உறவினர்கள் மற்றும் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களை வீட்டுக்குள் அனுமதிக்காதீர்கள். அடுத்த 14 நாட்கள் வெளியில் செல்லாமல் வீட்டில் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்' எனக்குறிப்பிட்டுள்ளார்.

# உலக செய்திகள்

## பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு கொரோனா வைரஸ் தொற்று!

பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. உலக நாடு ஒன்றின் தலைவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாவது இதுவே முதல் முறை என்பதுடன் ஏற்கனவே பிரித்தானிய இளவரசர் சார்ள்சுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பொரிஸ் ஜோன்சனுக்கு லேசான அறிகுறிகள் இருப்பதாகவும் அவர் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அலுவலர் பேராசிரியர் கிறிஸ் விற்றியின் ஆலோசனைக்கு ஏற்ப பிரதமருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது என பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "கடந்த 24 மணிநேரத்தில் எனக்கு லேசான அறிகுறிகள் தென்பட்டன. எனக்கு கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. என்னை நானே தனிமைப்படுத்திக் கொள்வேன். நாம் இந்த வைரஸுக்கு எதிராகப் போராட, காணொளி காட்சி சந்திப்புகள் மூலம் அரச நடவடிக்கைகளுக்குத் தலைமை ஏற்பேன்" எனத் தெரிவித்துள்ளார். இதனிடையே, இளவரசர் சார்ள்சும் கடந்த சில தினங்களாக வீட்டில் இருந்தபடியே தமது அலுவலக பணியை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## 48 மணி நேரத்தில் பாரிஸ் நெருக்கடிக்கு உள்ளாகும் – நிபுணர்கள் அதிர்ச்சி தகவல்

எதிர்வரும் 48 மணி நேரத்துக்குள் பாரிஸ் மற்றும் அதனை சூழவுள்ள வைத்தியசாலைகளில் நெருக்கடி நிலை அதிகரிக்கும் என பிரான்ஸ் வைத்தியசாலை குழுமத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன், குறித்த வைரஸ் பரவல் அதிகரிப்பானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும் எனவும் அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளார்.

பிரான்சில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 32,964 ஆக அதிகரித்துள்ளதுடன், குறித்த நோயாளர்களில் 3787 பேர் தற்பொழுது தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1995 ஆக காணப்படுகிறது.

இந்நிலையில் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள கொரோனா கண்காணிப்பு குழுவின் பிரதம வைத்தியர், பாரிஸ் பகுதியில் நோய் பரவலை கட்டுப்படுத்த தமக்கு நிச்சயமாக உதவி தேவை எனவும், ஏனெனில் பிரான்சின் கிழக்கு பகுதிகளில் காணப்படும் அபாயகரமான நிலை பாரிஸ் மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கும் பரவி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்து வரும் 24 அல்லது 48 மணி நேரத்தில், நாம் மட்டுப்படுத்தப்பட்ட வசதி-களை மட்டுமே கொண்டிருப்போம் எனவும், பிராந்தியங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு இடையிலான தனிமைப்படுத்தல்களை மேற்கொள்வது குறித்த வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மிக அவசியமானது என்பதை அக்காலப்பகுதியில் தாம் வெளிக்காட்ட நிர்ப்பந்திக்கப்படுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




## கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் சீனாவை மிஞ்சியது அமெரிக்கா

உலகிலுள்ள சகல நாடுகளையும் மிஞ்சும் வண்ணம், அதிக கொரோனா தொற்றாளர்களைக் கொண்ட நாடாக அமெரிக்கா பதிவாகியுள்ளது. Worldometers இணையத்தளத்திற்கு அமைய, அமெரிக்காவில் கொரோனாவினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1300-ஐக் கடந்துள்ளது.




அமெரிக்காவின் - நியூயோர்க்கில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர். அங்கு சுமார் 39,000 பேர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். நியூ ஜெர்ஸி, கலிபோர்னியா, வாஷிங்டன் பிராந்தியங்களிலும் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர்.

சீனா மற்றும் இத்தாலியினை விடவும் அமெரிக்காவில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. 85,600-க்கும் அதிகளவிலானோர் அமெரிக்காவில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 21 பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களை வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வாஷிங்டன் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகளுக்கு அமைய, ஏப்ரல் மாதமளவில் அமெரிக்காவில் நாளாந்தம் நேரும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 2300 ஆக அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.அடுத்த நான்கு மாதங்களுக்குள் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தை கடக்கும் என அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அமைய, அமெரிக்காவில் 3.3 மில்லியன் மக்கள் தொழில்களுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

## இந்தியாவில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரிப்பு: 17 பேர் உயிரிழப்பு

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 724 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் இதுவரை 64 பேர் முழுமையாக குணமடைந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17ஆக அதிகரித்துள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



தமிழகத்தில் இதுவரை 35 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 6 பேர் குணமடைந்துள்ள நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த காலப்பகுதியில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்காக 23 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய நிதியமைச்சர் (அன்று) 2020.03.26 அறிவித்ததுடன், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய மத்திய வங்கி முன்னெடுத்துள்ளது.இதனிடையே, அமெரிக்க செனட்டர்களுக்கும் ட்ரம்ப் நிர்வாகத்திற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் சட்டமூலமொன்றைக் கொண்டு வருவது தொடர்பில் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது.

## ஈரானில் 2 ஆயிரம் படுக்கைகள் கொண்ட தற்காலிக மருத்துவமனை திறப்பு



மத்திய கிழக்கு நாடுகளில் கொரோனா அச்சுறுத்தலால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஈரானில் 2 ஆயிரம் படுக்கைகள் கொண்ட தற்காலிக மருத்துவமனை ஒன்றினை இராணுவத்தினர் திறந்துள்ளனர். தெஹ்ரான் சர்வதேச கண்காட்சி மையத்தை இவ்வாறு 2 நாட்களில் மருத்துவமனையாக இராணுவ வீரர்கள் மாற்றியமைத்துள்ளனர்.

லேசான கொரோனா அறிகுறி உள்ளவர்கள், சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களுக்காக இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. ஐ.சி.யூ, சத்திர சிகிச்சை அறை, மருத்துவ சாதனங்கள் பொருத்தப்பட்ட ஆய்வகம் என அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ள இந்த மருத்துவமனை மூன்று தனிமைப்படுத்தப்பட்ட மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

# ஜெனீவா அறிக்கை: இனி நடக்கப் போவதும் என்ன?



**கடந்தவார தொடர்ச்சி...**

எவ்வாறெனினும் இலங்கையின் முன்னைய அரசாங்கம் 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் உள்ளூர் நல்லிணக்க நடைமுறையை, அது பலனளிக்க ஆரம்பித்த நேரத்தில் திசை மாற்றிவிட்டனர். மனித உரிமைகள் சபைக்கும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் மாறாக அப்போதைய இலங்கை அரசாங்கம் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1 என்ற தீர்மானித்துக்கு இணை அனுசரணை வழங்கியது.

அதனையடுத்து இலங்கையின் முன்னைய அரசாங்கமானது மேற்படி 30/1 தீர்மானத்துக்கு, தவறுகளுடன் கூடிய இலங்கை தொடர்பான OISL அறிக்கையை பயன்படுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அண்மைய காலத்தில் பயங்கரவாதத்தை தோற்கடித்த ஒரேயொரு தேசிய பாதுகாப்பு அம்சமான இலங்கை பாதுகாப்பு படையினரின் வீரமிகு செயற்பாடுகளை நியாயமற்ற முறையிலும்நிந்திக்கும்வகையிலும் பயன்படுத்தியது. இந்நிலையில் அச் செயற்பாடுகளுக்குமாறாகபல்வேறு சாட்சியங்கள் கீழ்காண்பவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் பரணகம ஆணைக்குழு போன்ற உள்ளூர் அறிக்கைகள்,

ஐக்கிய இராஜ்ஜியத்தின் லோர்ட்ஸ் சபையில் நசேபி பிரபு முன்னிலையில் வழங்கப்பட்ட தகவல்கள், அத்துடன் சவாலுக்குட்படுத்தப்பட்ட மற்றைய அம்சங்களின் அளவுக்கு அதிகமாக குறிப்பிடப்பட்ட சிவிலியன்களின் மரண எண்ணிக்கை.

இலங்கையானது அதன் அரசியலமைப்பு வரைபுச் சட்டத்துக்குள் செயற்படுத்தும் வகையிலான கடப்பாடுகள் மேற்படி தீர்மானத்தில் உள்ளடங்குகின்றன. இவை இலங்கை மக்களின் இறைமையை மீறுவதாக உள்ளதுடன் அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை மீறுவதாகவும் அமைகின்றன. இணை அனுசாரணை தொடர்பாக தனது நிலைப்பாட்டை இலங்கையானது மீளவும் நினைத்துப் பார்ப்பதற்கு இது மற்றுமொரு காரணமாக உள்ளது.

நடைமுறையின்படி இலங்கையின் முன்னைய அரசாங்கமானது மேற்படி 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை ஆளுமைக் கொள்கையின் அனைத்து ஜனநாயக கொள்கைகளையும் மீறுவதாக அமைகிறது.

தீர்மானத்தின் நகல் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கப்பட்டமை, சர்வதேச அமைப்பொன்றின் நியமம் நாட்டுக்கு வழங்கப்படுவது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாமை, மேற்கூறிய இணை அனுசரணை தொடர்பான நடைமுறைகள் பற்றி பாராளுமன்றத்தில் எந்தவொரு குறிப்பும் இடம்பெறாமை,

மிகவும் முக்கியமாக, தீர்மானத்தில் உள்ள ஏற்பாடுகள், நாட்டின் உச்ச சட்டமான அரசியலமைப்பை மீறும் வகையில் இருப்பதால்,அதனை வெளியிட முடியாதிருந்தமை,

தொழில்சார்பான இராஜதந்திரிகள், கற்றோர், ஊடக மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் எல்லை மீறும் வகையில் அமைந்துள்ளமை.

அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இவ்விடயம் தொடர்பாக தன்னுடன் ஆலோசிக்கப்படவில்லை என்று கூறியிருந்தமை.

இலங்கையின் இறைமை மற்றும் கீர்த்திக்கு இன்றுவரை இவ்விடயம் ஒரு கறையாக அமைந்துள்ளன.

ஒரு சில நாடுகளை மட்டும் மகிழ்விக்கும் வகையில் அமைந்துள்ள இந்த தீர்மானத்தில் உள்ள ஏற்பாடுகளை, இலங்கையானது செயற்படுத்த முடியாத வகையிலும், அரசியலமைப்புக்கு ஒவ்வாத வகையிலும் இந்த இணை அனுசரணைத் தீர்மானம் அமைகிறது.

கௌரவமிக்க பாதிப்பு என்ற ரீதியில் மேற்படி செயற்பாடு சர்வதேச முறைமையில் இலங்கையின் நம்பிக்கையை பாழ்படுத்தியுள்ளது. அத்துடன் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் இலங்கையின் நம்பகத்தன்மைக்கு பங்கம் ஏற்படுத்தியுள்ளது. மேற்படி பொறுப்பற்ற செயற்பாடு நீண்ட காலமாக நிலவிய, பிராந்திய உறவுகளிலும் மற்றும் அணி சாராமை மற்றும் தெற்காசிய ஒருமைப்பாடுகளையும் பாதித்துள்ளது. இவை இலங்கையின் வெளிநாட்டு கொள்கையை பூஜ்ய விளையாட்டுக்கு இட்டுச் சென்றதால் எனது நாட்டை சதுரங்க விளையாட்டில் மதிப்பற்ற காயாக மாற்றியுள்ளது. மேலும் இலங்கையை அதன் பாரம்பரிய நடுநிலைத் தன்மையிலிருந்து தேவையற்ற வகையில் மாற்றியமைத்துள்ளது.

30/1 தீர்மானம் இலங்கையின் தேசிய புலனாய்வு செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான நடைமுறைகள் உள்ளிட்ட தேசிய பாதுகாப்பையும் மிகவும் மோசமான வகையில், குறைத்து மதிப்பிட்டுள்ளது.

2019 ஏப்ரல் மாத ஈஸ்டர் தின தாக்குதல் இடம்பெறவும் இது காரணமாகியது. இந்தத் தாக்குதலில் தேவாலயங்களும் ஹோட்டல்களும் இலக்காகின. வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரும் இதில் உயிரிழந்தனர். அதனையடுத்து தேசிய பாதுகாப்பை மீண்டும் ஸ்திர நிலைக்கு கொண்டு வருவதில் அரசாங்கம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

2015 ஒக்டோபரில் 30/1 தீர்மானத்தை இணை அனுசரணைக்குட்படுத்திய இலங்கையின் முன்னைய அரசாங்கத்தின் வெளி நாட்டமைச்சர் அது பற்றி 2019 மார்ச்சில் அறிக்கை விடுத்திருந்தார்.

அதில் அவர் வெளியிட்ட கருத்துகள் கேள்விக்குறியாக உள்ளன. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இடம்பெற்ற சுதந்திர தின விழாவில் உரையாற்றிய போது 'இலங்கையின் ஒவ்வொரு குடிமகனதும் உரிமையை நாம் பாதுகாப்போம்' என்று குறிப்பிட்டார். இலங்கை மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப அணிசாரா, நடுநிலை வெளிநாட்டு கொள்கையை பின்பற்றுவதன் மூலம், விடயங்களைப் புதிதாக பரிசீலிக்கும் கடப்பாட்டுடன் எமது அரசாங்கம் உள்ளது. 'பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மூலமான சுபிட்சமே' எமது நிகழ்ச்சி நிரலாக அமைகிறது.

இந்த அடிப்படையின் கீழ் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை ஊக்குவிக்கும் 40/1 தீர்மானத்தின் இணை அனுசரணையில் இருந்து விலகிக்கொள்ளும் தீர்மானத்தை நான் இன்று முன்வைக்க விரும்புகிறேன். அதேநேரம் அதன் முன்னைய 30/1 என்ற 2015 ஒக்டோபர் மாத தீர்மானம் மற்றும் 2017 மார்ச் மாத 34/1 ஆகிய தீர்மானங்களையும் இது உள்ளடக்குகிறது.

அத்துடன் மேற்படி தீர்மானங்களின் இணை அனுசரணையில் இருந்து விலகிக்கொண்டாலும் இலங்கை மக்கள் தொடர்பான பேண்தகு சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான இலக்குகளை எட்டுவதற்கு இலங்கை தொடர்ந்து கடப்பாட்டுடன் இருக்கும்.

பேண்தகு சமாதானத்தை எட்டுவதற்கு உள்ளூரில் வடிவமைக்கப்பட்ட நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் நடைமுறை மூலம் இலங்கைக்கு கடப்பாடுள்ளது. அதேநேரம் 2020 பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கையின் குறிக்கோளை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ஐ.நா. விளதும் அதன் முகாமைகளினதும் உதவியை இலங்கை தொடர்ந்து பெற்றுக்கொள்ளும்.

**நெற்றிப்பொறியன்**

# இனவாதம் அழிவு வாதமே!



கடந்தவார தொடர்ச்சி...

அதே வேளை அவருடைய கடந்த காலம் என்பதும் பெரும் பாரங்களையுடையதாகவே இருக்கிறது. குடும்ப ஆதிக்கம், ஊழல், போர்க்குற்றங்கள், ஊடக வன்முறை, ஜனநாயக மறுப்பு என்ற பல விசயங்கள் அவருக்கு இந்தச் சுமையைக் கொடுக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டு களையெல்லாம் வெற்றி கொண்டு, வெளியே அவர் பல மான நிலையில் இருப்பதைப் போலத் தென்பட்டாலும் அவருடைய கட்டமைப்பினுள்ளும் அவரைச் சுற்றியும் அவர் நெருக்கடிக் குள்ளாகித்தானிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலை அடுத்து தென்பகுதியில் இந்தத் தேர்தல் தவறானது என்று நடத்தப்பட்ட 02.02.2020 இல் நடத்தப்பட்ட போராட்டமும் 04.02.2020இல் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தமையும் இங்கே கவனிக்கத்தக்கன.

அதைப் போல இனிவரும் நாட்களில் அவர் எதிர் கொள்ள வேண்டியிருக்கின்ற அபிவிருத்தி, ஜனநாயக மீளமைப்பு, புனர்வாழ்வு, வேலை வாய்ப்புகளை அளித்தல், சம்பள உயர்வு, பொருளாதார உயர்வுக்கான முயற்சிகள், அரசியற் தீர்வு போன்ற முக்கியமான பிரச்சினைகள் எல்லாம் அவருக்கு இனிப்பாக இருக்கப் போவதில்லை. அத்துடன், அடுத்து வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுடன் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த தமிழ்க்கட்சிகளும் சற்று விலகிய நிலையில், ஒரு புதிய அரசியற் தொடக்கத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதால் சிறுபான்மை மக்களின் அரசியற் போராட்டங்களும் இன்னொரு வடிவத்தில் அதிகரிக்கலாம். (இது, சிறுபான்மைக் கட்சிகள் எப்படிக் கையாளப்போகின்றன என்பதைப் பொறுத்தே இருக்கிறது). வடக்குக் கிழக்கில் மீள் கட்டுமானம், புனர்வாழ்வு என்பவற்றுக்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. முன்னரைப்போல இந்தப் பிரதேசத்தை யாருடைய கண்களிலிருந்தும் அரசாங்கம் மறைத்து விட முடியாது.

அத்துடன், சர்வதேச ரீதியாகவும் அரசாங்கத்துக்கு ஏகப்பட்ட நெருக்கடிகள் உண்டு. அதிகாரத்துக்கு மீண் டும் வந்திருக்கும் மகிந்த ராஜபக்சவுடன் என்னதான் சமரசங்களைச் செய்தாலும் அடிப்படைமுரண்கள் நிழலாகவே இருக்கப்போகின்றன. இது அபிவிருத்திக்கான உதவிகள், கடன்களில் தாமதங்களை ஏற்படுத்தும். பொதுவாக எந்தத் தரப்பையும் இலாவகமாகக் கையாளும் அரசியல் மரபுமகிந்தவின் கூட்டணியிடம் இல்லை என்று சொல்லப்படுவதுண்டு. போரின்போது இந்தக் கரடுமுரட்டுத் தனத்தை பிறர் அனுசரிக்கவே வேண்டியிருந்தது. அதற்குக் காரணம், புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற அவர்களின் தேவைகள். ஆனால், இனிமேல் அந்தமுறைமை சரிப்படாது.

ஆனால், இதையெல்லாம் சிலர் வேறுவிதமாகப் பார்க்கிறார்கள். மகிந்த ராஜபக்சவும் குழுவினரும் இப்போது நெருக்கடிகளால் தாம் சூழப்பட்டிருப்பதை நன்கறிவார்கள். இதனால், அவரகளுடைய உளவியல், முன்னரை விடவும் எதிர்நிலையில் - எச்சரிக்கையுணர்வு அதிகரித்த நிலையில் தான் இருப்பார்கள். அதாவது அபாயங்கள் தங்களை நோக்கி வருவதைத் தடுப்பதற்கான காரியங்களை முற்கூட்டியே செய்ய முனைவார்கள் என்கின்றனர் இவர்கள். எதிர்ப்பாளர்களை மடக்குதவற்கான உபாயங்களில் ஏற்கனவே தேர்ச்சி பெற்றிருக்கும் ராஜபக்சவினர் இந்தத்தடவை அதை உச்சநிலையில் பயன்படுத்துவர் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர். அப்படியான நிலையில் பொதுமக்களும் எதிரணிகளும் மோசமான எதிர்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். குறிப்பாக தன் மீது வரும் நெருக்கடியைத் திசை திருப்பி, மக்களின் நெருக்கடியாக மாற்றும் ஒரு உபாயத்துக்கும் ஜனாதிபதி போகக் கூடும். இது நாட்டின் ஜனநாயகத் துக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தும்.

ஆக, இப்போது இரண்டு பக்கமும் கூருள்ள ஒரு கத்தியைப் போன்ற அரசியல் நிலைமையே இலங்கைத் தீவில் உருவாகியிருக்கிறது. இதை மிக நுட்பமாகவும் விவேகமாகவும் கையாள வேண்டிய பொறுப்பில் அரசாங்கத்துக்கு வெளியே இருக்கும் சகல தரப்பினரும் இருக்கின்றனர். முன்னைய ஜனாதிபதிகளுக்கு வெளியே இருந்த அதிருப்தியாளர்கள், எதிர்ப்பாளர்களின் மனதிலிருந்த கோபம் வேறு. இப்போதிருக்கும் கோபம் வேறு. இது தீவிரம் நிறைந்தது. காட்டமானது. ஆகவே மக்களை ஒருங்கிணைப்பதற்கு அதிக சிரமப்படப்போவதில்லை.

குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் எதற்கும் அவ சரப்படாமல் கள நிலைமைகளைச் சரியாக மதிப்பிட்டு காரியமாற்ற வேண்டிய சந்தர்ப்பம் இது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமை தொடக்கம் போரில் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் அந்த மக்களின் வாழ்க்கை தொடர்பான ஏராளம் முக்கிய மைப்பிரச்சினைகள் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் முன்னே இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை பற்றிய சிந்தனை இந்தக் கட்சிகளுக்கு இன்று அவசியம். ஒரு பக்கத்தில் தேசியப் பிரச்சினைகளில் அரசாங்கத்தை தீர்வு நோக்கி அழைத்துச் செல்வது. மறுபக்கத்தில் வடக்குக் கிழக்கின் பிரச்சினைகளில் தேசியத் தரப்புகளை அழைத்து வருவது. இந்த இரண்டு வகையான அணுகுமுறைகள் தமிழ்முஸ்லிம்கட்சிகளுக்குத்தேவையாக இருக்கின்றன. இதற்கு இந்தக் கட்சிகள் தமக்குள் கடக்க வேண்டிய பல தடைக்கோடுகளை இவை கடக்க வேண்டும். அப்படிக் கடக்கவில்லை என்றால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பது இந்தக் கட்சிகளுக்கான பொறியாகிவிடும்.

பெரும் நெருக்கடி வலையத்தால் சூழப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஸ ஒரு போதும் சும்மா இருக்கப் போவதில்லை. வியூகங்களை வகுப்பதிலும் போர்களை உருவாக்குவதிலும் வெற்றிகொள்வதிலும் அவர் ஒரு ஓயாத மனிதராக இருக்கிறார். அவரைத் தோற்கடிப்பதற்கான கனிதங்களோடு. வியூகம் அமைக்கவுள்ளவர்கள் அவரையும் விட வேகத்தோடும் விவேகத் தோடும் இருப்பது அவசியம். தவிர, அரசு என்ற பலமான ஒரு அதிகார மையம் ஜனாதிபதியின் கைகளில் இருக்கிறது. எனவே எதிர் வியூகம் என்பது சாதாரணமாக இருக்கப்போவதில்லை.

இங்கே வெற்றி தோல்வி என்பது தனி நபர்களுக்கிடையிலானது - அல்லது அமைப்புகளுக்கிடையிலானது என்று அர்த்தப்படுத்தப்படவில்லை. மாறாக அரசாங்கத்தை மக்களின் நலன்களை நோக்கியும் பிரச்சினைகளை நோக்கியும் பணியவைப்பது. ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் போரிடுவது என்பதாகவே கொள்ளப்படவேண்டும். இதுதான் இன்றைய நிலையில் இலங்கைத் தீவின் மிகப் பெரிய சவால்களாக கருதப்படுகின்றன. இவையே இலங்கையின் ஆகப் பெரும் அச்சுறுத்தல்களாகவும் எதிர்காலம் குறித்த கவலைகளாகவும் பலருக்கும் இருக்கின்றன.

இலங்கைத் தீவில் இப்பொழுது மகிந்த ராஜபக்ஸ அல்லது ராஜபக்ஸ குடும்பம் இரண்டாவது வெற்றியை பெற்றிருக்கிறது. ஒன்று புலிகளுடனான போரின்போதுகிடைத்தவெற்றி. அடுத்தது ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றி. இந்த இரண்டு வெற்றிகளும் அநேகமாக யாருமே எதிர்பார்த்திருக்காதவை. ஏன் வெற்றி பெற்றவர்களே எதிர்பார்த்திராத வெற்றிகள் இவை. அதிலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி பலரையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியுள்ளது. அதேவேளை இந்த வெற்றி இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளிலும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தவுள்ளன.

உண்மையில் இந்த விளைவுகள் சாதகமாவதும் பாதகமாவதும் வெற்றி பெற்ற ராஜபக்ஸ குடும்பத்தின் கைகளில் இல்லை. பதிலாக எதிர்த்தரப்புகளின் கைகளிலேயே அது தங்கியுள்ளது. இப்பொழுது வெற்றி பெற்றிருப்பவர் மகிந்த ராஜபக்ஸ அல்ல. அவர் இப்போது நெருக்கடி என்ற பெருஞ்சுழியின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளார். இனிவரும் நாட்கள் அநேகமாக மகிந்த ராஜபக்ஸ வுக்கான நெருக்கடியாகவும் ராஜபக்ஸ குடும்பத்தின் நெருக்கடியாகவும் இருக்கப் போகின்றன.

அதேவேளை இதனை மக்களும் ஏனைய அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் சரியாகக் கையாளாதுவிட்டால், அது மக்களின் மீதான நெருக்கடியாகவும் மாறக்கூடிய அபாயமுண்டு. எதிர்க்கட்சிகள், எதிரணிகள், ஊடகங்கள் மீது ஏற்படக்கூடிய பெரும் அபாய நிலையாகவும் மாறக்கூடும். எது நடந்தாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை நாடு பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படவே போகிறது. இப்போது புலிகளுடனான போர் முடிந்த பின்னர், அது சிங்கள அரசியற் கட்சிகளின் போராகமாறியுள்ளது. சிறுபான்மை மக்களின் மீது செலுத்தப்பட்ட நெருக்கடிகள் தளர்வடைந்து அது, பெரும்பான்மைச் சமூகத்துக்குள்ளேயான நெருக்கடியாக மாற்றமடைந்துள்ளது. புலிகளை முற்றாக அழித்தால் மகிந்த ராஜபக்ஸ தன்னுடைய கையைத் தானே சுட்டுக் கொண்டதாகத்தான் அமையும் என அரசியல் ஆய்வாளர் ஒருவர் புலிகளின் வீழ்ச்சிக்கு முன்னே குறிப்பிட்டது இங்கே நினைவுக்கு வருகிறது. இப்போதைய நிலை ஏறக்குறைய அப்படித்தானிருக்கிறது. மகிந்த ராஜபக்ஸவின் நான்காண்டுகால ஆட்சியானது இலங்கைத் தீவின் நீண்டகாலப் போரை முடிவுக் குக் கொண்டு வந்தது என்பதைக் தவிர ஏனைய எல்லா விதத்திலும் எதிர்நிலையான விசயங்களையே உருவாக்கியுள்ளது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்குப் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் உள்ள அத்தனை அதிகாரங்களையும் சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராகவும் பிற அரசியற்கட்சிகள், மக்களுக்கெதிராகவும் பாவிக்கக் கூடியவராக மகிந்த ராஜபக்ஸ அப்போதிருந்திருக்கின்றார். ஜே.ஆரின் காலத்தில் அவருக்குத்தோதாக சிறில் மத்யூ, காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்றோர் இருந்தனர். மகிந்த ராஜபக்ஸ வுக்குத்தோதாக அவருடைய சகோதரர்கள் இருந்தார்கள்.

ஜே.ஆர் சிறுபான்மைச் சமூகங்களின் ஜனநாயக உரிமைகள் அத்தனையையும் நிராகரித்து அவர்களின் மீது கேள்விக்கிடமில்லாத வகையில் இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்தார். எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சிதறடித்து, அந்தக் கட்சியின் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக் காவின் குடியுரிமையையும் பறித்தார். ஏறக்குறைய இதைப் போன்றதொரு கையாளல் முறைமையைத் தான் மகிந்த ராஜபக்ஸவும் மேற்கொண்டிருந்தார். ஜே. ஆர். தன்னுடைய இரண்டாவது பதவிக்காலத்தில் முடிவில்லாத நெருக்கடிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்.

**தொடரும்...**

**இரணியன்**

# தேர்தல் காலம் வந்ததும் புலி வீரர்களா? முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

**கடந்தவார தொடர்ச்சி...**

முள்ளிவாய்க்கால் முர்ச்சையாக எஞ்சிய தமிழர்கள் வவுனியாவுக்கு சாய்த்து வரப்பட்டார்கள். போர் முடிந்ததும், "புலிகள் மேற்கொண்ட ஜனநாயக விரோத செயற்பாடுகளினாலேயே அழிந்து போனார்கள்" என சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார்.

*கூட்டமைப்பின் இரண்டாம் காலம் (2010)*

இவ்வாறாகவே இரா. சம்பந்தன் 2010இல் வெளியே வந்தார். வெளியே எனில், 2010ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கு. கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் இது இரண்டாம் காலம். தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலாம் காலம் புலிகளோடு முடிவடைய, இரண்டாம் காலம் புலிகளற்ற அரசியல் வெளியில் ஆரம்பமானது. இந்தக் காலத்தில் 4 முக்கிய பணிகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நிகழ்ச்சி நிரல்படுத்தினார்.

**1ஆம் பணி**

இரண்டாம் காலத்தைப் பொறுப்பெடுத்தவுடனேயே இரா. சம்பந்தன் செய்த முதல் பணி, தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருந்த புலிகளின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல தயாராயிருந்த புதியவர்களை வெற்றிகரமாக வெளியேற்றியமை தான். புலிகளுக்கு விசுவாசமான புதியவர்களுக்குப் பதிலாக இரா. சம்பந்தனுக்கு விசுவாசமான புதியவர்கள் அணி அந்த இடைவெளிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டது. இரா. சம்பந்தன் உருவாக்கிய புதியவர்கள் அணியைச் சேர்ந்தவர்களின் முதல் தகுதி தமிழ் தேசிய அரசியல் வியாபாரிகளாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். அத்துடன், தமிழரசுக் கட்சியின் அரசியல் பாரம்பரியத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கும், அதில் திளைத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

**2 ஆம் பணி**

இரண்டாவது பணியாக, புலிகள் விட்டுச் சென்ற ஏகப்பிரதிநித்துவ இடைவெளியை இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு அப்படியே சுவீகரித்துக் கொண்டது. ஏகப் பிரதிநிதித்துவ அந்தஸ்த்தில் நின்றபடியே, தமிழர்களைக் கொன்றொழித்த இரத்த வெறியோடு வந்து நின்ற சரத் பொன்சேகாவுக்குத் தமிழர்கள் வாக்களிக்க வேண்டுமெனவும் கூட்டமைப்பு கோரியது. 'தமிழ் சனங்கள் முட்டாள்கள்' என்பதை 2010இல் மீளவும் நிரூபித்துக் காட்டினார்கள். 2009இல் தமிழர்களை கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்பட மூல காரணமாக இருந்த ஒருவரை ஒரு வருடத்துக்குள் அவரால் காயப்படுத்தப்பட்ட அதே தமிழர்களைக் கொண்டு வாக்களிக்கச் செய்த பெருமையும் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பையே சாரும்.

**3ஆம் பணி**

மூன்றாவது பணி எதுவெனில், தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற கட்சிகளின் கூட்டை வலுவற்றதாக்கி, இரா. சம்பந்தன் தலைமை வகித்த தமிழரசுக் கட்சியை முதன்மை நிலைக்கு கொண்டு வருவதே ஆகும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமான வீடு தமிழரசுக் கட்சியிடம் கடன் வாங்கியதாக இருந்தமையினால், அவ்வாறு தமிழரசுக் கட்சியை முதன்மை நிலைக்குக் கொண்டு வருவதில் பெரிய சிரமங்களும் இருக்கவில்லை. இரா. சம்பந்தனின் விசுவாசிகளாக இருந்த புதியவர்கள் இதற்கு உள்ளும் புறமுமாக உழைத்தனர் என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று. தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கின்ற கட்சிகளுக்குள் தமிழரசுக் கட்சி மட்டும் மேலிருந்து கீழ் நோக்கி தீர்மானிக்கும் சக்தியாக மாறிவருவதை, அதற்குள் இருக்கின்ற ஏனைய கட்சிகள் விரும்பவில்லை. ஈ.பி. ஆர்.எல்.எவ் கட்சியின் பிரதானி சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்த விடயத்தில் அடிக்கடி கிளர்ந்தெழுந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என தமிழரசு கட்சி தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் கோரிநின்றன. தமிழ் மக்களுக்கு விளக்கமற்ற கட்சி பதிவு விடயத்தைத் திட்டமிட்டே ஓரங்கட்டி வந்தார் இரா. சம்பந்தன்.

அதற்குப் பிரதான காரணம் இன்றிருக்கின்ற பெரும்பாலான தமிழர்களுக்கு, 'வீடு' என்ற அரசியல் குறியீட்டையும் தமிழ் தேசிய கூட்டமைப்பையும் பிரித்துப் பார்க்கத் தெரியாது. அவர்களைப் பொறுத்தவரையில் புலிகளால் உருவாக்கப்பட்டு, புலிகளின் நினைவு எச்சமாக மிஞ்சியிருப்பது தமிழ் தேசிய கூட்டமைப்பும், அதன் சின்னமான வீடும் மட்டும்தான். அவர்களுக்கு கூட்டமைப்பென்பது தனியொரு கட்சி. வீடு கூட்டமைப்பின் சின்னம் என்றே அர்த்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். 2009ஆம் ஆண்டுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு அறுந்த வரலாறுஎல்லாம்சாதாரண வாக்காளர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கவில்லை. அதனைச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் அச்சு ஊடகங்களுக்கு இருந்தது. ஆனால், அதனை எந்த ஊடகங்களின் நிகழ்ச்சிநிரலிலும் கூட்டமைப்பின் உண்மை தன்மையை வெளிப்படுத்தும் விடயம் உள்ளடங்கவில்லை. தமிழ் அச்சு ஊடகங்களின் சீழ் வடியும் அவலமான பக்கங்களில் இதுவும் ஒன்று.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்தி,



அதிகாரமிக்க சக்தியாக முன்னிறுத்தும் வேலைத்திட்டங்கள் நடந்தாலும், இதுவரை அந்தக் கட்சி கூட்டமைப்பை விட்டு வெளியேற விரும்பவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறி, தமிழரசுக் கட்சியின் அடையாளத்தோடு வாக்கு கேட்டு மக்களிடம் வந்தால் இலகுவில் தோற்றுவிடுவோம் என்பதை அதன் தலைமைகள் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், காலப்போக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பை மறக்கச் செய்து தமிழரசுக் கட்சியை ஆழப் பதிய வைக்க முடியும் என்பதில் அந்தக் கட்சியின் தலைமை அசையாத நம்பிக்கை கொண்டிக்கின்றது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

**4ஆம் பணி**

2010ஆம் ஆண்டுக்குப் பின்னரான தமிழ் தேசிய கூட்டமைப்பின் நான்காவது பணியாக அமைவது, கடந்த கால போராட்டங்கள், இழப்புகள், தியாகங்கள், சொத்திழப்புகள் அனைத்துக்குமான நீதி பெறுதலைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்கிற கோசத்தை தமிழ் தேசியத்தின் அரசியலாக்குவது. அதாவது, சர்வதேச ரீதியிலும், உள்ளக ரீதியிலும் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அரசியல் நடைமுறைகளைக் கைவிடுவது என்ற நிலைப்பாட்டுக்கு கூட்டமைப்பு வந்துள்ளதை கடந்த 4 வருட அவதானிப்புகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. இதனைப் பல்வேறு கிளையாகப் பிரித்து நோக்கலாம்.

முதலாவதாக, ஐக்கிய இலங்கை என்பதை கேள்விக்குபடுத்தும் அனைவரையும், அனைத்தையும் அரசியலிலிருந்தே ஓரங்கட்டும் பணியை மேற்கொள்கின்றனர். உதாரணமாகக் காணாமல் போனோர் விடயத்தை முன்னிலைப் படுத்தி செயற்பட்டுவரும் அனந்தியை புறக்கணித்தமை, இனப்படுகொலை தொடர்பான விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் சிவாஜிலிங்கத்தைப் புறக்கணித்தமை, வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் இனப்படுகொலை தொடர்பிலான தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் அவர் தொடர்பில் தமிழரசுக் கட்சியினரும், இரா. சம்பந்தனும் வெளியிட்டுவரும் கருத்துக்கள் என்பன இதற்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவன.

சர்வதேச ரீதியில் இலங்கையைத் தண்டனைக்கு உட்டுபடுத்தும், தமிழர் சார்பில் நீதி கோரும் செயற்பாடுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் செயற்றிட்டங்களையும் கூட்டமைப்பு செய்துவருகின்றது. போர் முடிந்தகையுடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டத் தொடர்களில் தமிழர்கள் சார்பாகக் கலந்துகொள்ள வாய்ப்புக்கள் இருந்தபோதும் அதனைப் புறக்கணித்தது கூட்டமைப்பு. இதுகுறித்து கேள்வி கேட்டவர்களிடம், நாடுகள் கூடி கலந்துரையாடி முடிவுகள் எடுக்கும் இடத்தில் ஒரு கட்சியினராகிய நாம் கலந்துகொண்டு எதுவும் செய்யமுடியாதென இலகுவாக விளக்கம் சொன்னார் சுமந்திரன். மிகவும் பலமான தரப்பொன்றினால் பாதிப்புக்குள்ளான ஒரு தரப்பு தனக்கு நீதி தேவைப்படின் அதனை நோக்கி போக வேண்டுமே தவிர, பாதிக்கப்பட்ட தரப்பை நோக்கி யாரும் ஓடிவரப்போவதில்லை என்கிற அடிப்படை அறிவு கூட இல்லாமல் இந்தக் தருணத்தில் கூட்டமைப்பு செயற்பட்டது.

தொடரும்...

சுழியோடி

# கொரோனா அறிகுறிகள்

## நாள் 1–3

காச்சல்
தொண்டை வரட்சி

## நாள் 4

தொண்டை வரட்சியுடன் கரகரப்பான குரல்
உடல் அதிகரிக்கும்
பசியின்மை

## நாள் 5

உடல் சோர்வு
தசை வலி
வறட்டு இருமல்

## நாள் 6

லேசான காச்சல்
மூச்சுவிடுவதில் சிரமம்
வாந்தி
வயிற்றுப்போக்கு

## நாள் 7

காய்ச்சலின் வீரியம் அதிகரிப்பு
இருமல்,சளி அதிகரிப்பு
உடல் வலி அதிபரிப்பு

## நாள் 8

அதீத காய்ச்சல்
அதீத இருமல்
மூச்சு விடுவதில் கடும் சிரமம்












இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால்.29.03.2020அன்று வெளியிடப்பட்டது.